அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

# 2018 ஆண்டறிக்கை

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

50 1968 - 2018 සංවත්සරය Anniversary

රාජ්‍ය දැව සංස්ථාව • STATE TIMBER CORPORATION

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

# ஆண்டறிக்கை 2018

அரிமரச் சந்தைக்கான உண்மையான தலைமைத்துவம்

50 1968 - 2018 සංවත්සරය Anniversary

රාජ්‍ය දැව සංස්ථාව • STATE TIMBER CORPORATION



# அரை நூற்றாண்டுப் பயணம்

50
1968 - 2018
සංවත්සරය
Anniversary
රාජ්‍ය දැව සංස්ථාව • STATE TIMBER CORPORATION

## எமது நாளைய தினம்

### நோக்கு

நம்பிக்கைமிகு, உயர் தரமிக்க அரிமரம் மற்றும் மரத்தாலான உற்பத்திகளை வழங்குவதில் நாட்டின் தலைவராகத் திகழ்தல்

### பணி

காலத்திற்குக் காலம் பெற்றுக் கொண்ட அறிவு, தேர்ச்சி ஆகியவற்றைப் பயன்படுத்தி எமது வாடிக்கையாளர்களுக்கு அரிமரம் மற்றும் மரத்தாலான பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் இலங்கையின் தேசிய மற்றும் சுற்றாடல் சார் தேவைகளுக்குப் பங்களித்தல்



# அரை நூற்றாண்டுப் பயணம்



அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பெயரைக் காணும் எவரும் அரிமரத்துடனான அதன் தொடர்பினை உணர்வர். 50 ஆண்டு கால அனுபவத்துடன் மற்றும் அர்ப்பணிப்புடன், நாட்டிற்கும் அதன் நேசமிகு ஊழியர்களுக்கும் வழங்கிய சேவை சொல்லுந் தரமன்று. இவ்வெல்லா ஆண்டுகளிலும், அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு சுமையாக இராது தமது வியாபாரத்தினை வெற்றிகரமாக மேற்கொண்டுச் செல்வதற்கு ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு ஒரு முன் உதாரணப் பொக்கிஷமாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் முகாமை மற்றும் அனைத்து ஊழியர்களும் தமது அயராத பங்களிப்பின் மூலம் பல்வேறு தடைகள் மற்றும் சிக்கலான நிலைமைகளுக்கு மத்தியில் கூட்டுத்தாபனம் வெற்றியை நோக்கி வீறு நடை போட உறுதுணையாய் இருந்தனர் என்பதில் ஐயமில்லை. பொறுப்புமிக்கதாகவும் சூழல் நேயமிக்கதாகவும் எமது பெறுமதிமிக்க “மரங்களை” கவனமாக வெட்டுதலும் அகற்றுதலும் மற்றும் மக்களின் அரிமரத் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு கிடைக்கும் அரிமரத்தினால் மிகச் சிறந்த பயனைப் பெறும் விதத்தில் பல்வேறு வடிவமைப்புக்களையும் வடிவங்களையும் செய்தலும் எமது அடிப்படை குறிக்கோள்களாகும்.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனமானது அதன் 50ஆவது நிறைவாண்டில் மக்களுக்கு நீண்ட காலமாக சேவை செய்வதைப் போன்றே நாட்டிற்கும் சேவை செய்யும் உறுதிப்பாட்டுடன் இன்னுமொறு மைல்கல்லினை பதிக்கின்றது.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| ஆரம்பமும் இன்றும் | 07-09 |
| நிதிசார் முக்கிய பதிவுகள் | 10-11 |
| நிறுவனத் தகவல்கள் | 12 |
| முகாமைத்துவக் குழு | 13 |
| தலைவரின் செய்தி | 14 |
| விருதுகள் மற்றும் பாராட்டுக்கள் | 15-17 |
| பொது முகாமையாளரின் மீளாய்வு | 18-21 |
| எமது பொறுப்புக்கள் மற்றும் வர்த்தகப் பெறுமானங்கள் | 22-25 |
| பணிப்பாளர் சபை | 26-27 |
| சிரேட்ட முகாமைத்துவக் குழு | 28 |
| பணிப்பாளர் சபை மீளாய்வு | 29 |
| எமது அடைவு | 30-35 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டியின் அறிக்கை | 36-40 |
| வர்த்தகப் பொழிப்பு | 41 |
| ஒரு தசாப்தத்திற்கான கண்ணோட்டம் | 42-46 |
| தேசிய பொருளாதாரத்திற்கான பங்களிப்பு | 47 |
| கூட்டுத்தாபன சமூகப் பொறுப்பு | 48-52 |
| இடர்நேர்வு முகாமைத்துவம் | 53-56 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 57-67 |
| வருடாந்த கணக்குகள் | 68-92 |
| நிதிசார் கலைச் சொற்கள் | 93 |




## பொன் விழாவின் பெருமைமிக்க நினைவுகள




50 1968 - 2018
සංවත්සරය
Anniversary
රාජ්‍ය දැව සංස්ථාව • STATE TIMBER CORPORATION



## ஆரம்பம்...

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரசாங்கத்திற்குரிய வர்த்தக நிறுவனமொன்றாகும். அது 1968.04.04 திகதிய இல 14796 இலக்கத்தைக் கொண்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம், காணி, நீர்ப்பாசன மற்றும் மின்வலு அமைச்சரினால் 1957இன் இல 49ஐக் கொண்ட அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் அதிகாரத்தின் பிரகாரம் நிறுவப்பட்டதுடன், 1969.11.07ஆந் திகதிய இல 14879, 1982.02.05 ஆந் திகதிய இல 178/10, 2001.06.26ஆந் திகதிய இல 1190/7 மற்றும் 2008.02.25ஆந் திகதிய இல 1538/7 ஐக் கொண்ட வர்த்தமானி அறிவித்தல்கள் பிரகாரம் மேலும் திருத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப மூலதனம் 2.5 மில்லியன் ரூபாவாகும்.

## இன்று நாம்...

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம் பத்தரமுல்லை, “சம்பத்பாயா” வளாகத்தில் அமைந்துள்ளதுடன், இது கூட்டுத்தாபனத்தின் மையமாகவும் அதன் உப பிரிவுகள் நாடளாவிய ரீதியிலும் அமைந்துள்ளன.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அதன் வருமானத்தினை முக்கியமாக மர உற்பத்தி மற்றும் விற்பனை மூலம் ஈட்டுகின்றது. பேண்தகு வன அறுவடையினை அரசாங்க மரக்கூட்டுத்தாபனம் வன பாதுகாப்புத் திணைக்களத்துடன் இணைந்து பேண்தகு வன நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அமைய செயற்படுத்துகின்றது.
அதி உயர் தரத்தில் மர உற்பத்திகளையும் சிறந்த சேவையினையும் வழங்குவதற்கு நாம் எப்போதும் முயற்சிக்கின்றோம். கடந்த 50 வருட காலமாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரிமரம் மற்றும் மர உற்பத்தித் துறையில் மிக உயர் மட்டத்தினை அடைந்துள்ளது. ஆவ் வருடங்கள் பூராகவும் நாம் அதி உயர்தர உற்பத்திகளுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகோலாகப் பெயர் பெற்றோம்.

# நிதிசார் முக்கிய பதிவுகள்

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கானது | | 2018 | 2017 | வித்தியாசம் % |
|---|---|---|---|---|
| **ஈட்டல் தொடர்பான முக்கிய தரவுகள் மற்றும் வீதங்கள்** | | | | |
| வருவாய் | ரூ. '000 | 4,069,020 | 4,253,774 | -4% |
| திறைசேரி மற்றும் வருமான வரிகளுக்கு முன் இலாபம் | ரூ. '000 | 672,433 | 966,804 | -30% |
| திறைசேரிக்கு செலுத்திய வரி | ரூ. '000 | 100,000 | 100,000 | 0% |
| வருமான வரி | ரூ. '000 | 250,372 | 301,063 | -17% |
| வருடத்திற்கான தேறிய இலாபம் | ரூ. '000 | 429,662 | 242,328 | 77% |
| உரிமைப்பங்கு மீதான ஈட்டல்கள் | % | 9.2 | 5.7 | 61% |
| சொத்துக்கள் மீதான ஈட்டல்கள் | % | 6.6 | 3.8 | 72% |
| **ஐந்தொகை முக்கிய தரவுகள் மற்றும் வீதங்கள்** | | | | |
| மொத்த சொத்துக்கள் | ரூ. '000 | 6,520,465 | 6,317,702 | 3% |
| மொத்த உரிமைப் பங்கு | ரூ. '000 | 4,660,357 | 4,230,694 | 10% |
| மொத்த படுகடன்கள் | ரூ. '000 | 1,860,109 | 2,087,008 | -11% |
| கடன்/உரிமைப் பங்குகள் | % | 40 | 49 | -19% |
| கடன்/மொத்த சொத்துக்கள் | % | 29 | 33 | -14% |
| **ஏனைய தகவல்கள்** | | | | |
| மொத்த ஊழியர்கள் | எண். | 2,001 | 2,083 | -4% |
| ஊழியர் ஒருவரின் வருவாய் | ரூ. '000 | 2,033 | 2,042 | -0.4% |
| ஊழியர் ஒருவருக்கான இலாபம் | ரூ. '000 | 336 | 464 | -28% |
















# விருதுகள் மற்றும் பாராட்டுக்கள்

2018



இலங்கையில் 'மிகச் சிறந்ததில் மிகச் சிறந்த' வர்த்திகத்திற்கான சிறப்பின் சின்னமான இலங்கை தேசிய வணிக சபையினால் (NCCSL) நடத்தப்பட்ட 2018 - தேசிய வியாபார சிறப்பு விருது வைபவத்தின் போது அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் "அரசதுறை - உற்பத்தி"க்காக வழங்கப்படும் **"தங்க விருதினைச்"** சுவீகரித்துக் கொண்டது.

2017



2016



2017 மற்றும் 2016 - தேசிய வியாபார சிறப்பு விருது வைபவத்தின் போது அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் "அரசதுறை - உற்பத்தி"க்காக வழங்கப்படும் **"தங்க விருதினைச்"** சுவீகரித்துக் கொண்டது.



- பசுமை மெக்கோ விருது 2008 - இலங்கை ஊடகச் சங்கம்
- காடு மற்றும் சுற்றாடல்சார் கல்விக்கான பங்களிப்பிற்காக அங்கீகாரம் மற்றும் மதிப்பீட்டு மெக்கோ விருது 2010
- 2009 "தேசத்தின் மகுடம்" கண்காட்சியில் ஆக்கபூர்வமிக்க கண்காட்சிக் கூடம்



2012



2013

தேசிய வணிக சபையினால் 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட தேசிய வியாபார சிறப்பு விருது வைபவத்தின் போது அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரசதுறை உற்பத்திக்காக வழங்கப்படும் சிறப்புத் தேர்ச்சி விருதினைச் சுவீகரித்துக் கொண்டது.



2009 2010 2011

தேசிய வர்த்தகச் சபையினால் வழங்கப்படும் "தங்க விருதினை" தொடர்ச்சியாக 2009, 2010, 2011ஆம் ஆண்டுகளில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சுவீகரித்துக் கொண்டது.



2009 2010 2011



தேசிய வணிக சபையினால் 2014ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேசிய வியாபார சிறப்பு விருது வைபவத்தின் போது அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரசதுறை உற்பத்திக்காக வழங்கப்படும் "வெள்ளி விருதினைச்" சுவீகரித்துக் கொண்டது.

# நிறுவனத் தகவல்கள் -2018

### நிறுவனத் தகவல்கள் - 2018

**மாண்புமிகு கௌரவ மைத்ரீபால சிறிசேன -** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர்
**திரு. அஜித் மான்னப்பெரும -** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்
**திரு. அனுர திசாணாயக்க -** செயலாளர்,மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

### பணிப்பாளர் சபை - 2018

திரு கே.டப்ளியூ. சாந்த பண்டார **- தலைவர் -** அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
திரு எச்.வை.ரீ. பவரகுமார **- செயற்படு பணிப்பாளர் -** அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
திரு டீ. விஜேசிறிவர்தன **- பணிப்பாளர் -** திறைசேரிப் பிரதிநிதி
திரு எஸ்.ஏ.ஏ. சத்துருசிங்க **- பணிப்பாளர் -** வனப் பாதுகாப்பு ஜெனரால்
திரு. எம்.வீ. கருணாரத்ன **- பணிப்பாளர்**
திரு. ரீ.பீ. ரஞ்சன் பெர்னாண்டோ **- பணிப்பாளர்**
திரு. ஏ.எம்.சீ. பெரேரா **- பணிப்பாளர**

கலாநிதி என்.டீ. ருவன்பத்திரண **- பொது முகாமையாளர் -** அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி

திரு டீ. விஜேசிறிவர்தன - தலைவர்
திரு எஸ்.ஏ.ஏ. சத்துருசிங்க - உறுப்பினர்
திரு. எம்.வீ. கருணாரத்ன - உறுப்பினர்

### கணக்காய்வு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் திணைக்களம்
306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை

### பிரதான வங்கியாளர்

இலங்கை வங்கி

### நிதி ஆண்டு

ஜனவரி 01ஆந் திகதி முதல் டிசம்பர் 31ஆந் திகதி வரை
தொலைபேசி : +94 11 2 866 600-5
தொலைநகல் : +94 11 2 866 623
இணையத்தளம் : www.timco.lk



# முகாமைத்துவக் குழு- 2018

| | | |
|---|---|---|
| பொது முகாமையாளர் | கலாநிதி என்.டீ. ருவன்பத்திரண | PhD (Forestry), M.Sc. (Forestry), B.Sc. |
| **பி. பொது முகாமையாளர்கள்** | | |
| பி.பொ.மு. (உள்ளகக் கணக்காய்வு) | திருமதி.டப்ளியூ.டப்ளியூ.எம்.ஜே. குரே | FCA |
| பி.பொ.மு. (நிதி) | திரு. ஜீ.டீ.எஸ். குமாரசிங்க | MBA, B.Sc(Acct.Fin. Mgr), ACA, ACMA |
| பி.பொ.மு.- (மானிட வள) | திரு. எம்.ஏ.சீ.என். சமரசிங்க | MPM, B.Sc (Business studies) Ad.Dip in Mgt. and Admin. |
| பி.பொ.மு. - (இயக்கம்) | திரு. எம்.சீ. தேவேந்திர | M.Sc. (Forestry), B.sc |
| பி.பொ.மு.- (சந்தைப்படுத்தல்)(பதில்) | திரு. டப்ளியு.பீ. சமந்த | M.Sc.(Forestry), B.Sc. N. Dip.Teaching |
| பி.பொ.மு.-(பொறியியல், உற்பத்தி)(பதில்) | திரு. ஜீ.ஜீ. திசர கமகே | B.Sc. |
| **உதவி பொது முகாமையாளர்கள்** | | |
| பதில் உ.பொ.மு. - வலய) | திரு. பீ.கே. அஜித் சந்தன | B.Sc. |
| பதில் உ.பொ.மு. - (வலய) | திரு. ஏச்.பி. ரஜவத்த | BA |
| **முகாமையாளர்கள்** | | |
| முகாமையாளர் - (நிர்வாகம்) | திரு.ஏ.ஜீ.எச். குலரத்ன | M.LRHRM,PgD. LRHRM,PQHRM,Dip.in Mgt,Dip. in Forestry,Dip.in English, AMCIPM, ACPM |
| முகாமையாளர்(ஆராய்ச்சி,அபிவிருத்தி,பயிற்சி) | திரு. சீ.கே. முத்துமால | M.Sc.(Forestry), B.Sc. (Agri:) Hons. |
| முகாமையாளர் - (நிதி) | திரு.பி.டீ.ஏ.எம்.டீ. விக்கிரமசிங்க | Dip. (F.A) |
| முகாமையாளர் - (நிதி) | திரு.பி.ரீ.என். போவத்த | |
| முகாமையாளர் - (நிதி) | திருமதி. கே.டீ.கே.சீ. டி சில்வா | |
| முகாமையாளர் - (நிதி) | திரு. எச்.ஜீ.ஆர். விஜேநாயக்க | |
| முகாமையாளர் - (உள்ளகக் கணக்காய்வு) | திரு. எச்.எம்.எஸ். மாதவ | B.Com (Sp) |
| முகாமையாளர் - (இயந்திரப் பொறியியல்) | திரு. ஏ.கே.லசித்த எட்மண்ட் | B.Sc.(Engineering) |
| முகாமையாளர் - (கொள்வனவு, கப்பலேற்றல்) | திரு. ரீ. அருண டி சில்வா | |
| முகாமையாளர் - (தகவல் தொழில்நுட்பம்) | திரு. ஏ.ஜீ. மாதுவகே | |
| முகாமையாளர் - (பாதுகாப்பு) | திரு. சமிந்த வீரமன் | |
| முகாமையாளர் - (சிலிப்பர்கள்,மின்மா. கம்பங்கள்) | திரு. டீ.எம்.என். புஷ்பகுமார நில்மிணி | B.Sc. |

| பிராந்திய முகாமையாளர்கள் | | |
|---|---|---|
| பி. முகாமையாளர் (தலைமை அலுவலகம்) | திரு. ஆர். விஜேதுங்க | B.Sc.(Agri.)Sp |
| பி. முகாமையாளர் (தலைமை அலுவலகம) | திரு. எம்.டீ.சீ. சம்பத் | BA |
| பி. முகாமையாளர் (கொழும்பு) | திரு. எச்பி.எஸ். திசாநாயக்கா | |
| பி. முகாமையாளர் (மொணறாகலை) | திரு. எம்.கே.ஜீ. வசந்த ராஜ் | |
| பி. முகாமையாளர் (அனுராதபுரம்) | திரு. எச்.எல். நந்தன | B.Sc. |
| பி. முகாமையாளர் (அம்பாறை) | திரு. யூ.பீ.எச. உளுவடுகே | B.Sc. |
| பி. முகாமையாளர் (இரத்தினபுரி) | திரு. டீ.எச். ராஜபக்ஷ | M.Sc.(Forestry),B.Sc. |
| பி. முகாமையாளர் (கண்டி) | திரு. ஈ.எம்.எஸ். ஏக்கநாயக்க | |
| பி. முகாமையாளர் (யாழ்ப்பாணம்) | திரு. எஸ். ஸ்கந்தராஜா | |
| பி. முகாமையாளர் (குருணாகலை) | திரு. யூ.எஸ்.எம். பெர்னாண்டோ | BA (Sp) |
| பி. முகாமையாளர் (மாத்தறை) | திரு. டப்ளியூ.ஜ. சாரங்க | B.Sc.(Hon.) |
| பி. முகாமையாளர் (நுவரெலியா)(பதில்) | திரு. டீ.ஏ. ஹெந்தவித்தாரண | |
| பி. முகாமையாளர் (பண்டாரவளை) (பதில்) | திரு. சுனில் ஜயரத்ன | |
| பி. முகாமையாளர (மின்னேரிய)(பதில்) | திரு. ஏல்.எஸ். ஜயசேக்கர | |

| பிரதி முகாமையாளர்கள் | | |
|---|---|---|
| பி. முகாமையாளர் (சட்டம்) | திருமதி. கே.ஜ.டீ.பி. காரியவசம் | LLB, Attorney at Law |
| பி. முகாமையாளர் (வடிவமைப்பு,தரக்கட்டுப்பாடு) | திருமதி. ஈ.எம்.எம். பெர்னாண்டோ | |
| தொகுதிப் பகுப்பாய்வாளர் | திரு. டப்ளியூ.எச்.ஏ. சந்திரகுமார | B.Sc. |
| தொகுதிப் பகுப்பாய்வாளர | திரு. ஜே.எம்.எம்.பீ. ஜயசுந்தர | B.Sc. (Sp) Hon. |
| பி. முகாமையாளர் (மனித வளம்) | திருமதி. எச்.பி. பெரேரா | |
| பி. முகாமையாளர் (மனித வளம்) | திருமதி. கே.எஸ். அபேநாயக்கா | |
| பி. முகாமையாளர் (நிதி) - பூசா | திரு.யூ.எஸ். மடவல | HNDA, MAAT |
| பி. முகாமையாளர் (நிதி) - கண்டி | திரு. எச்.எம்.பி.பீ. ஹேரத் | MBA, FABA, HNDA, PgD |
| பி. முகாமையாளர் (நிதி) - பூசா | செல்வி ஏ.எல.டப்ளியூ. துஷாரி டி சில்வா | HNDA, MAAT |
| பி. முகாமையாளர் (நிதி) - நுவரெலியா | திரு. என்.ரீ.எஸ்.கே.பீ. தில-க்கவர்த்தன | HNDA, MAAT |
| பி. முகாமையாளர் (நிதி) - யாழ்ப்பாணம | திரு. டுப்ளியூ.எம்.ஜீ.எம். விஜேசிங்க | |
| பி. முகாமையாளர் (நிதி) - மொணறாகலை | திரு. ஏ.ஜே. புஷ்பகுமார | B.Sc.(Bus.Admin) |
| பி. முகாமையாளர் (நிதி) - மின்னேரிய | திரு. எம்.டீ.பீ.எம். திசாநாயக்கா | B.Sc.(Acc) |
| பி. முகாமையாளர் (நிதி) - தலைமை அலு. | திருமதி. டீ.என். விஜேசூரிய | B.Sc.(Acc), CTA |
| பி. முகாமையாளர் (நிதி) - தலைமை அலு | திருமதி. எஸ். வித்தானகே | |
| பி. முகாமையாளர் (நிதி) - அனுராதபுரம் | திருமதி. டுப்ளியூ.கே. ஜயசிங்க | |
| பி. முகாமையாளர் (நிதி) - கொழும்பு | திரு. எஸ்.பீ.ஏ.ஜே.சீ. சமரகோன் | B.Sc.(Finance) |
| பி. முகாமையாளர் (நிதி) - பண்டாரவளை | திரு. எஸ்.எம். ஹேவகே | B.BA(Bus.Econ.) |
| பி. முகாமையாளர் (நிதி) - கல்தேமுல்லை | திரு. டப்ளியூ.ஏ.எல.எஸ். பெரேரா | |
| பி. முகாமையாளர் (நிதி) - குருணாகலை | திரு. எஸ்.எச்.ஜ. பிரசாத் | B.BA(Bus.Econ.) |
| பி. முகாமையாளர் (நிதி) - யாழ்ப்பாணம் | திரு. டீ.கே.ஜீ.ஜீ. புஷ்பகுமார | B.Com. |
| பி. முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) | பி. முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) | |

| | | |
|---|---|---|
| பி. முகாமையாளர் (அரமரத் தரப்படுத்தல்) | திரு. டீ.பீ.கே.எஸ்.ஜீ. சமரவிக்கிரம | B.Sc.(Mkt.Mgt.) |
| பி. முகாமையாளர் (அரிமர வழங்கல்) | திரு. பி.ஏ. நலின் தேசப்பிரிய | |
| பி. முகாமையாளர் (தளபாட வடிவமைப்பு) | திருமதி. ஏச்.எம்.ரீ.எஸ். அபேரத்ன | B.Desi. (Hon.) MBA in MOT |
| பி. முகாமையாளர் (அரிமர ஆலை) | திரு. ஏம்.பீ.என். அருண சாந்த | B.Sc.(Bus.Admin.) |
| பி. முகாமையாளர் (விசாரணை) | திரு. ஏஸ்.ஏ.டீ. நிரோஷன் | B.Sc.(Bus.Mgt.) |

| பிரதி தொகுதி முகாமையாளர்கள் | | |
|---|---|---|
| பதில். பி. முகாமையாளர (தளபாடத் தொகுதி) அம்பாறை | திரு. ஏன்.பீ.எஸ். ஜயரத்ன | |
| பி. முகாமையாளர் (தளபாடத் தொகுதி) கல்தேமுல்லை | திரு. ஏச்.எம்.யூ.பீ. சோமவீர | BLE, Dip. IT & M |
| பி. முகாமையாளர் (தளபாடத் தொகுதி ) பூசா | திரு. ஆர்எஸ். புள்ளியகே | B.Sc.(Bus.Admin) |

| பிரதிப் பிராந்திய முகாமையாளர்கள் | | |
|---|---|---|
| பி. பி. முகாமையாளர் (பணடாரவளை) | திரு. ஐ.பீ. லியனகே | |
| பி. பி. முகாமையாளர் (நுவரெலியா) | திரு. டப்ளியூ.டீ.பீ.ஜீ. ஜயசேக்கர | |
| பி. பி. முகாமையாளர் (மின்னேரியா) | திரு. கே.எம்.பீ.ரீ.சீ. கப்பிலரத்ன | |
| பி. பி. முகாமையாளர் (மின்னேரியா) | திரு. யூ.ஜே.ஜீ. ஏக்கநாயக்கா | |
| பி. பி. முகாமையாளர் (கண்டி) | திரு. ஆர்.சீ. சமன் குமார | |
| பி. பி. முகாமையாளர் (கண்டி) | திரு. டப்ளியூ.ஏ.எஸ். விஜேசேக்கர | |
| பி. பி. முகாமையாளர் (யாழ்ப்பாணம்) | திரு. ரீ.பீ. ரமேஷ் | |
| பி. பி. முகாமையாளர் (இரத்தினபுரி) | திரு. எச்.ஏ. காமிணீ அல்விஸ் | |
| பி. பி. முகாமையாளர் (மொணராகலை) | திரு. எஸ்.சீ. ஜயமான்ன | B.Sc. |
| பி. பி. முகாமையாளர் (கெப்பெட்டிபொல) | திரு. டீ.எல். அபேநாயக்கா | |
| பி. பி. முகாமையாளர் (மாத்தறை) | திரு. கே. சுந்திரசேன | |
| பி. பி. முகாமையாளர் (அனுராதபுரம்) | திரு. ஏம்.டபளியூ.டப்ளியூ.பி. முதன்னாயக்கா | |
| பி. பி. முகாமையாளர் (கொழும்பு) | திரு. பீ. ஹெட்டிஆரச்சி | B.Sc. |
| பி. பி. முகாமையாளர் (குருணாகலை) | திரு. எஸ்.ஏ. மனோஜ் துஷார | |
| பி. பி. முகாமையாளர் (குருணாகலை) | திரு. ஆர்.பீ.பீ.டீ. ஜயசிங்க | |



# தலைவரின் செய்தி

❝நாம் எமது சுற்றாடல் மற்றும் சமூக கலாசார ரீதியான செயலாற்றுகையினை உயர் மட்டத்தில் விஸ்தரிக்கின்றோம். பேண்தகு முன்னணியில், சூழல் ரீதியாக பேண்தகு செயன்முறைகளைப் பயன்படுத்தவதன தாக்கத்தினை நிறுவனம் அறிந்து வைத்துள்ளது.

2018 மீளாய்வாண்டில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனமானது பேண்தகு அடைவினை நோக்கி மேலும் பாரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் என்ற வகையில், 2018 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை சார்பாக உங்களுக்கு முன்வைக்க விரும்புகின்றேன்.

## செயற்படு சூழல்

கடந்த 50 ஆண்டுகளை பின்னோக்குகையில், இந்தப் பயணமானது பல தடைகளையும் கஷ்டங்களையும் கடந்து வந்துள்ளமை குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையிலும் உலகிலும் நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் நிலையினைக் கருததிற் கொள்கையில், அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் வெற்றி இலங்கையிலுள்ள ஏனைய அரச நிறுவனங்களுக்கு ஒரு நல்ல உதாரணம் எனலாம்.

கருத்திற் கொள்ளும் ஆண்டு எமது கூட்டுத்தாபனத்திற்கு ஒரு கடினமிகு ஆண்டாக இருப்பினும், ஒட்டு மொத்த பணிப்பாளர் சபையினதும், முகாமையினதும் அவ்வாறே ஒட்டு மொத்த பணிக் குழாத்தினரினதும் அர்ப்பணிப்பு, தன்னம்பிக்கை, அயராத முயற்சி என்பன குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கும் 2018ஆம் ஆண்டின் வெற்றிக்கும் வழிகோலின. சூழல் காரணங்களுக்காக இலங்கை அரசாங்கம் காலத்திற்கு காலம் மேற்கொண்ட தீர்மானங்கள் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டில் அடிக்கடி நேரடியாகப் பாதித்தன. 2018ஆம் ஆண்டு 5 தசாப்த கால கொண்டாட்டத்துடன் புதிய அத்தியாயம் ஒன்றை தொடங்கும் ஆண்டாகும்.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் நம்பிக்கைமிகு மற்றும் தரம் மிகுந்த அரிமர உற்பத்திகளை வழங்குவதில் அரிமரத் தொழிற்றுறையில் முக்கிய வகிபாகத்தினை வகிக்கின்றது. நூம் தொடர்ந்தும் எமது பொருளாதார செயலாற்றுகையினை வலுப்படுத்துவதுடன் எமது எல்லா வியாபார நடவடிக்கைகளிலும் வினைத்திறனை அதிகரிக்கின்றோம். ஆத்தோடு, மேலும் நாம் எமது சுற்றாடல் மற்றும் சமூக கலாசார ரீதியான செயலாற்றுகையினை உயர் மட்டத்தில் விஸ்தரிக்கின்றோம். பேண்தகு முன்னணியில், சூழல் ரீதியாக பேண்தகு செயன்முறைகளைப் பயன்படுத்தவதன தாக்கத்தினை நிறுவனம் அறிந்து வைத்துள்ளது.

கூட்டுத்தாபனத்தின் பெறுமதிமிக்க சொத்து மனித வளம் என்பது எமது நம்பிக்கையாகும். 2018ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தின் இலக்குகளை அடைந்து கொண்டு எமது வாடிக்கையாளர்களுக்கு இயலுமான உயர்ந்த மட்டத்தில் சேவையினை அர்ப்பணிக்கும் ஊழியர்களின் திறன்கள் மற்றும் ஆற்றல்களை மேம்படுத்தும் நோக்கில் பயிற்சி மற்றும் தொழில்வாண்மைசார் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் ஆகிய வடிவத்தில் எமது பணிக்குழாத்தினரில் நாம் தொடர்ந்தும் முதலீடு செய்தோம்.

2018 தேசிய வியாபார சிறப்பு விருது வைபவத்தில் அரசதுறை உற்பத்திக்காக வழங்கப்படும் தங்க விருதினை சுவீகரித்துக் கொண்டமை எமது அர்ப்பணிப்பிற்கு பறை சாற்றுகின்றது.

## கூட்டுத்தாபன சமூகப் பொறுப்பு

2018இல் எல்லா கோணங்களிலும் கட்டுப்பாட்டு நியமங்கள் மற்றும் தொழில்முனைவுத் திறன்களைப் பின்பற்றுவதன் மூலம் செயலாற்றுகை விருத்தியினை அடைவதற்கு எம்மால் முடிந்தது. பேண்தகு அபிவிருத்திக் கோட்பாட்டுக்கு இணங்க, இந்நோக்கத்திற்காகவே அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு விசேட அலகின் ஊடாக செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும்˙ "துருஜன மாணவர் வங்கி" மர நடுகை நிகழ்ச்சித் திட்டத்தினை தொடர்ந்தும் மேற்கொள்வதன் மூலம் நாம் ஒரு பொறுப்புமிக்க கூட்டுப் பிரஜை என தடம் பதித்துள்ளோம். "வனரோப்பா" நிகழ்ச்சியின் கீழ் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் நாற்று மேடுகளில் ஏறக்குறைய 130,000 கன்றுகளை உற்பத்தி செய்து, அரசாங்க, பகுதி அரசாங்க, அரசு சாரா நிறுவனங்களுக்கு மற்றும் பாடசாலைகளுக்கு அலவசமாக விநியோகிக்கப்பட்டன. ஆரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு விழாவின் நிமித்தம் ஒரே காலத்தில் நிகழ்ச்சிகள் பல ஒழுங்கு செய்யப்பட்டதுடன், பல்கலைக்கழகங்களில் கற்கும் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்களும் வழங்கப்பட்டன.



## நிதி செயலாற்றுகை

2018இல் பதிவாகியுள்ள வளர்ச்சி வீதத்திற்கு கைத்தொழிற்றுறையினால் குறைந்த விகிதம் வழங்கப்பட்ட நிலையில், பொருளாதாரத் துறையின் எல்லா துறைகளும் வளர்ச்சிக்காக பங்களித்ததன் பயனாக இலங்கை 3.2மூ வளர்ச்சி வீதத்தினைப் பதித்துள்ளது.




கடந்த ஆண்டின் 4,253 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2018 நிதி ஆண்டின் போது 4,069 மில்லியன் ரூபா விற்பனைப் புரள்வினைக் கூட்டுத்தாபனம் பதிவு செய்துள்ளது. 2018இல், விற்பனைகளின் வருவாய் வீழ்ச்சியடைந்த போதும், அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் திறைசேரி வரிக்கு முன்னரான 672 மில்லியன் ரூபா இலாபத்தினையும் வரிக்குப் பின்னரான 322 மில்லியன் 7பா இலாபத்தினையும் பதிவு செய்வதற்கு முடியுமாயிற்று. 2017ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட புள்ளிவிபரங்களுடன் ஒப்பிடுகையில் திறைசேரிக்கு முன்னரான இலாபம் மற்றும் திறைசேரிக்கு பின்னரான இலாபம் என்பன முறையே 31மூ மற்றும் 43மூ ஆல் வீழ்ச்சியடைந்துள்ளன.

சொத்துக்கள் மீதான வருமானமானது கூட்டுத்தாபனம் அதன் மொத்தச் சொத்துக்கள் தொடர்பில் எவ்வளவு இலாபகரமானது என்பற்கு குறிகாட்டியாகும். 2018இல் அது 4.9மூஆக இருந்ததுடன், கடந்த வருடம 2017உடன் ஒப்பிடுகையில் 45மூ வீழ்ச்சியனைக் குறித்தது. கடந்த







வருடத்துடன் ஒப்பிடுகையில் விற்பனை வருமானத்தில் உள்ள வீழ்ச்சியுடன் இணைந்து நிர்வாக, விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் அதிகரித்தமை தேறிய இலாபத்தில் வீழ்ச்சிக்கு வழிகோலியுள்ளது. எனினும், கூட்டுத்தாபனத்தினால் வரிக் கொடுப்பனவு, ஸ்டம்பேஜ் கொடுப்பனவு, திரட்டிய நிதியத்துக்குச் செலுத்திய விசேட வரி என தேசிய பொருளாதாரத்திற்கு 2199 மில்லியன் ரூபாவினைப் பங்களிப்பதற்கு முடிந்தது. 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 48மூஆன வீழ்ச்சியைக் கொண்ட 6.9மூ உரிமையாண்மை மீதான வருமானம் குறிக்கப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனத்தின் பிரதான பங்குதாரர் இலங்கை அரசாங்கமாகும். குடந்த பல வருடங்களாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் உரிமையாண்மை மீதான கூடிய வருமானத்தை உருவாக்கியுள்ளது. உரிமையாண்மை மீதான வருமானம் ஆண்டுதோறும் வளர்ச்சி கண்டுள்ளதுடன், கூட்டுத்தாபனம் அதன் அதிகரிக்கப்பட்ட மூலதனத்தினை அதிகமான இலாபங்களையும் மூலதன முதலீட்டினை வினைத்திறன்மிக்கதாக மேற்கொள்வதற்கும் பயன்படுத்தியுள்ளது.

## எதிர்நோக்கு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் அரிமரத் தொழிற்றுறையின் அபிவிருத்தியிற்கு பாரிய பங்களிப்பினை வழங்குவதற்கு முடிந்துள்ளதுடன், அதன் செயற்பாடுகளின் முறையான முகாமையினால் மிகச் சிறந்த பெறுபேற்றினையும் பெற முடிந்துள்ளது. ஆத்தோடு, எதிர்வரும் நிதியாண்டின் போது போட்டிமிக்க நன்மைகள், தரமிக்க மர உற்பத்திகளை உற்பத்தி செய்தல், நுகர்வோர் தெரிவிற்கான விடயங்களை மேலும் விஸ்தரித்தல் ஆகிய நோக்குடன் பரந்த அளவிலான மூலதன முதலீடுகளின் ஆதரவுடன் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் நவீன சந்தைப்படுத்தல் உத்திகளை அறிமுகப்படுத்தவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

குறுகிய மற்றும் நடுத்தர கால வளர்ச்சியினைத் துரிதப்படுத்தும் அனைத்து எமது சொதது அடித்தளத்தின் வலுவான தன்மையினை மேம்படுத்துவதற்கும் எமது மூலதனக் கட்டமைப்பின் நெகிழ்வுத் தன்மையினை விருத்தி செய்வதில் கவனஞ் செலுத்துவதற்கும் எமது முதலீட்டு அணுகுமுறைகளை பல்வகைப்படுத்துவதன் ஊடாக எமது இலக்குகளுடன் இணைவாக மிகச் சிறந்த பெறுபேறுகளை வழங்குவதற்கு எமது உத்தியினை நாம் அபிவிருத்தி செய்வோம்.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனமானது சவால்களை எதிர்கொள்வதற்கு மற்றும் அதன் முக்கிய வியாபாரங்களை வளர்ப்பதற்கும் சந்தைப் பங்கினைக் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பங்களைச் சாதகமாகப் பயன்படுத்துவதற்கும் நன்கு தயார் நிலையில் இன்று உள்ளது என நான் நம்புகின்றேன். நிறுவனம் ஒவ்வொரு வருடமும் மேலும் நவீனமயப்படுத்துவதற்கும் நவீன தொழில்நுட்பங்களின் ஊடாக வீண்விரயங்களைக் குறைப்பதற்கும் வாடிக்கையிாளர்களை நன்கு திருப்திபடுத்துவதற்கும் திட்டமிடுகின்றது.

## நன்றி நவிலல்

கூட்டுத்தாபனத்தை ஓர் உறுதியான நிலைப்பாட்டிற்கு இட்டுச் செல்ல தமது தொடர்ச்சியான பங்களிப்பினை வழங்கும் பொது முகாமையாளர் மற்றும் அவரது பணிக்குழாத்தினருக்கு எனத மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகின்றேன். மேலும், அரிமரம் மற்றும் மரத்தாலான உற்பத்திகளின் நீண்ட கால வழங்குனரான எமக்கு விசுவாசமாக உள்ள எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கும் எனது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பணிப்பாளர் சபை சார்பாக கௌரவ மகாவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் அவர்களுக்கும், பிரதி அமைச்சர் அவர்களுக்கும் அமைச்சின் செயலாளர் உட்பட் அதன் பணிக்குழாதினருக்கும், வனப் பாதுகாப்பு ஜெனரால் அவர்கள் மற்றும் அத்திணைக்களத்துடன் இணைந்துள்ள எல்லா பணிக் குழாத்தினருக்கும், ஏனைய சகல அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் எமக்கு வழங்கிய பாரிய ஆதரவிற்கு நன்றிகளை மனப்பூர்வமாகத் தெரிவிக்கின்றேன்.

2018ஆம் ஆண்டு ஓர் எளிதன ஆண்டாக இருக்காத போதும், எதிர்வரும் ஆண்டினை மென்மேலும் வெற்றிகரமான ஆண்டாக ஆக்குவதற்கு தடைகளை எல்லாம் களைத்தெறிந்து, உறுதிப்பாட்டுடன் பணிபுரிவதே எமது முக்கிய சவாலாகும்.



**திரு கே.டப்ளியூ. சாந்த பண்டார**
**தலைவர்**
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்



# பொது முகாமையாளரின் **மீளாய்வு**

"கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் செலவு மிகுந்த பரிபாலனத்துடன் எம்மால் இலாபங்களை ஈட்ட முடிந்த மற்றும் அரிமரத் தொழிற்றுறைக்கு மிகவும் சவாலான காலமாகவும் இருந்த 2018 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடையும் நிதியாண்டிற்கான அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை உங்கள் முன்வைக்க முடிவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

## ஆண்டிற்கான செயலாற்றுகை

மீளாய்வாண்டுடன் கடந்த பல வருடங்களைக் கருத்திற் கொள்ளும் போது, நாட்டில் பொருளாதார மற்றும் அரசியல் நிலைமை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை என்பதுடன் வியாபார நடவடிக்கைகள் பல இன்னல்களுக்கு முகங.கொடுத்தன. கூட்டுத்தாபனத்தின் விற்பனை வருவாயில் ஏற்பட்ட வீழ்ச்சி, அதிக ஊழியச் செலவு, நிர்வாகச் செலவினங்கள் காரணமாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை குறைவடைந்துள்ளது. தேசிய பொருளாதார உத்திகள் மற்றும் பொருத்தமான பொருளாதார கொள்கைகள் ஆகியவற்றிற்கு சமாந்திரமாக பேண்தகு பொருளாதார அபிவிருத்தியினை அடையும் நோக்கில் 2018ஆம் ஆண்டில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் தனது இலக்குகளையும் கொள்கைகளையும் வகுத்துள்ளது. 2018இல் 4,069 மில்லியன் ரூபா வருடாந்த தேறிய விற்பனைப் புரள்வு இருந்ததுடன் கடந்த வருடத்துன் ஒப்பிடுகையில் அது 4மூ வீழ்ச்சியடைந்துள்ளது. வீழ்ச்சியடைந்து இருந்த போதும், கடந்த ஆண்டின் 967 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும் போது திறைசேரி வரிக்கு முன்னரான இலாபமாகக் கூட்டுத்தாபனம் 672 மில்லியன் ரூபா ஈட்டியுள்ளது.

எனினும், பொதுத் திறைசேரிக்கு செலுத்திய விசேட வரியாக 100 மில்லியன் ரூபா, மறைமுக மற்றும் நேரடி வரிகளாக 744 மில்லியன் ரூபா, ஸ்டம்பேஜ் ஆக 1355 மில்லியன் ரூபா ஆகியன உள்ளடங்கலாக தேசிய பொருளாதாரத்திற்கு 2.199 மில்லியன் ரூபா பங்களித்துள்ளது. திறைசேரிக்கு செலுத்திய வரிக்கு பின்னரான இலாபம் மற்றும் வரி 322 மில்லியன் ரூபா தொகையாக இருந்ததுடன் கடந்த வருடத்தில் அது 566 மில்லியன் ரூபாவாக இருந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் மந்தநிலை மிகவும் மந்தமாக இருந்தது. ஆனால், இது எமது உற்பத்தி நியமங்களை மேலும் வலுப்படுத்தி எதிர்வரும் ஆண்டில் உயர்ந்த செயலாற்றுகையினை அடைவதற்கான இடத்தில் ஏற்கனவே உள்ளது. இலங்கை தேசிய வர்த்தகச் சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட 2018 தேசிய வர்த்தக அதிசிறந்த விருதுகள் வைபவத்தில் வருடத்தின் அதிசிறந்த செயலாற்றுகைக்கான பொன் விருதினை சுவீகரித்து நாம் பெற்ற வெற்றி, முகாமை மற்றும் பணிக்குழாம் ஆகிய இரு தரப்பினரதும் அர்ப்பணிப்பினைச் சான்று பகர்வதாக அமைந்துள்ளது.



## ஒரு பொறுப்புமிக்க நிறுவனமாகச் செயற்படுதல்

2018ஆம் ஆண்டு பூராகவும் பொருளாதாரம் மற்றும் சுற்றாடல் மீதான நடைமுறையிலுள்ள நடத்தைகளை நோக்குகையில் எமது செயற்பாட்டு நடவடிக்கைகள் சூழல் நேயமிகு இடத்தில் வைக்கப்படுகின்றன. மேலும் நாம் மரநடுகையின் பால் பாடசாலைச் சிறார்களின் ஆர்வத்தை மென்மேலும் மேம்படுத்தும் நோக்கில் மரநடுகை நிகழ்ச்சியான "துருஜன மாணவர் வங்கி" ணினை தொடர்வதன் மூலம் பொறுப்புமிகு கூட்டுப் பிரஜையாக சக்திமிக்கதொரு தடப் பதிவை கட்டியெழுப்பியுள்ளோம். அத்துடன், கேகாலை மற்றும் குருணாகலை மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் விவசாய உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டதுடன், மரநடுகை மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. ஊலக சுற்றடல் தினத்தினை நினைவு கூரும் முகமாக, தெரிவு செய்யப்பட்ட அரச முகவர்களுக்கு கன்றுகள் விநியோகிக்கப்பட்டதுடன், மாத்தறை, அலவெல்ல வீதி நெடுகிலும் பலாமர நடுகை நிகழ்ச்சி ஒழுங்குசெய்யப்பட்டது.

சுமூக பொறுப்பினைப் பூர்த்திசெய்வதாக கூட்டுத்தாபனத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் ஆய்வு மற்றும் பயிற்சி ஆகியவற்றில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, 50ஆவது நிறைவு ஆண்டு விழாவினையொட்டி விசேட செயற்றிட்டமாக பல்கலைக்கழகங்களில் கற்கும் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு 43 புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன. ஆரசாங்க மரக் கூட்டுத்தாபனம் வாடிக்கையாளரின் கேள்வியின் அடிப்படையில் அரிமர இனங்காணல் மற்றும் உறுதிப்படுத்தும் சேவையினை வழங்குகின்றது. எமது கூட்டுத்தாபனத்தின் நோக்கிற்கு இணைவாக, நம்பிக்கைமிகு மற்றும் அதி உயர்தர அரிமர வழங்குனராக இருப்பதன் மூலம் நாட்டிற்கான தேசிய பொறுப்பினை எம்மால் நிறைவெற்ற முடிந்தது.

## தொழில்தருநர் மற்றும் ஊழியர் தொடர்பு

நிறுவனத்தின் கொள்கை அமுலாக்கல் தொடர்பில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சரியான எடுக்கப்பட்ட தீர்மானங்களே கூட்டுத்தாபனத்தின் வெற்றிக்குப் பின்னால் உள்ள முக்கியமானதொரு

இரகசியமாகும். கூட்டுத்தாபனத்தின் மிகவும் பெறுமதிமிக்க வளம் மக்கள் ஆவர். ஆவர்களது அர்ப்பணிப்பு மற்றும் முயற்சிகள் சாதகமான நேரங்களிலும் பாதகமான நேரங்களிலும் வெற்றியின் பால் இட்டுச் சென்றன. பெரும் சவால்களுக்கு மத்தியில் பணிப்பாளர் சபையுடன் துணை நின்ற முகாமை மற்றும் பணிக்குழாத்தினரை நாம் பாராட்டுவதன் மதிக்கின்றோம். ஊழியர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிசெய்வதன் மூலம் ஊழியர்களின் நம்பிக்கையினைக் கட்டியெழுப்பும் வகையில் வெளிப்படைத்தன்மை மிக்கதாகவும் நியாயமான முறையிலும் ஊழியர் பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், புலமைப்பரிசில்கள், ஆட்சேர்ப்புக்கள் என்பன மேற்கொள்ளப்பட்டன. கூட்டுத்தாபனம் ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு பல்வேறு வகையான வசதிகளை வழங்குவதுடன், 2,000இற்கும் மேற்பட்ட தனிநபர்களுக்கு தொழில் வாய்ப்பக்களை வழங்குகின்றது. மேலும், நாட்டில் முக்கிய பிரச்சினை ஒன்றான வேலையின்மை பிரச்சினையைக் குறைப்பதற்கு அரசாங்க முகவராகவும் தொழிற்படுகின்றது. ஏதிர்காலத்தில் வினைத்திறன்மிக்க ஊழியர் சேவையினை (ீடீநுளூ) அளவிடுவதற்கான ஒரு முறைமையினை அறிமுகப்படுத்தவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், ஊழியர்களை ஆர்வமூட்டி திருப்திமிக்கதொரு பணிக்குழுவினை உருவாக்க எதிர்பார்க்கின்றோம்.

## சூழலுடன் இணைப்பு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் பேண்தகு முறையில் அரிமரத் தேவையினை வழங்குவதன் மூலம் சூழலுக்கு பெறுமதி சேர்த்துள்ளது. ஊழு2 ஒரு பசுமை இல்ல வாயு என்பதால் அது வளிமண்டளத்திலுள்ள வெப்பத்தைச் சிக்கவைத்து, பசுமை இல்ல விளைவினை உச்ச கட்டத்திற்கு அப்பால் அதிகரிக்க வழிவகுக்கின்றது. மரங்களால் 3.67 மடங்கு காபனீரொட்சைட்டினை வளிமண்டலத்திலிருந்து பிரித்தெடுக்க முடிவதுடன், ஒளிச்சேர்க்கை செயன்முறை மூலம் மரத் திசுக்களில் 1 காபன் அலகினைக் களஞ்சியப்படுத்தும். இது மரத்தின் வகை, வயது, வளர்ச்சி வீதம், தளத்திள் தரம், வன முகாமைத்துவ நடைமுறைகள் ஆகியவற்றைப் பொறுத்து வேறுபடும். முரம் மீளப்புதுப்பிக்கப்படக் கூடிய மூலப் பொருள். அதனால், இக்கருத்துக்களை அவதானத்திற் கொண்டு அறுவடை செய்தல் மற்றும் விஞ்ஞான ரீதியிலான சரியான பயன்பாடு என்பன பொது மக்களின் அரிமரத்தின் பாலுள்ள ஆர்வத்தினையும் சூழல்சார் அம்சங்களையும் தணிக்கும். அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அதன் சூழலுடனான இணைப்பு மற்றும் விஞ்ஞான ரீதியான நோக்கு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதன் மூலம் இக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த தந்திரோபாயத் திட்டத்தினைத் தீட்டுவதற்கு விரும்புகின்றது.

## எதிர்கால நோக்கு

பெறுமதி சேர் தரமிக்க மர உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கும், உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தைகளில் விற்பனை செய்வதன் மூலம் விற்பனை வருமானத்தை அதிகரிப்பதற்கும் அடுத்த 10 வருடங்களுக்கு அரிமரத் தொழிற்றுறையினை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் நடந்தேறிக்கொண்டிருக்கின்றன. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் எதிர்வரும் 10 ஆண்டுகளில் தனது தளபாட வருவாயினை அதன் மொத்த வருவாயில் 10மூஇலிருந்து 30மூ இற்கு அதிகரிப்பதற்கும் அதிகமான பெறுமதி சேர் மர உற்பத்திகளை சந்தையில் விடுவிப்பதற்கும் பெறுமதி சேர்க்காமல் குற்றிகள் வடிவில் விற்பனை வருவாயினை 69மூ இலிருந்து 50மூ இற்கு குறைப்பதற்கும் எதிர்பார்க்கின்றது. மனித உடலின் கட்டமைப்பிற்கு அமைய தளபாடங்களை உற்பத்தி செய்வதற்கு

மரம் தொடர்பிலான ஆராய்ச்சியினை விரிவாக செயற்படுத்துதல் மற்றும் அனைத்து நவீன "பணிச்சூழலியல்" மற்றும் "மானுடவியல்" கோட்பாடுகளையும் கருத்திற் கொள்ளுதல் வேண்டும். எனவே மனித உடல் மிகவும் சௌகரியத்தை உணர்வதுடன் உடல் அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்ளலாம். மேலும், மரத் தரப்படுத்தல் நிர்ணயங்களின் புதிய முறையொன்றினை அறிமுகப்படுத்துவதுடன், விஞ்ஞான ரீதியான முறைமையொன்றின் பிரகாரம் குற்றிகள் மற்றும் அரிந்த மரங்களைத் தரப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்த படியாக, எதிர்வரும் வருடங்களில் ஐளுழு சான்றிதழ் திட்டம் ஒன்றினை அபிவிருத்தி செய்வதன் மூலம் முடிவுப் பொருட்களின் விநியோகிப்பிற்கு மூலப் பொருட்களைப் பயன்படுத்தி தளபாடங்களை உற்பத்தி செய்வதற்கான தர உத்தரவாத முறையொன்றினை அமுல்படுத்துவதற்கு நாம் திட்டமிடுகின்றோம்.



## எனது மனமார்ந்த நன்றி

கூட்டுத்தாபனத்தின் நம்பகத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புமிகு ஆதரவிற்காக தலைவர், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், செயற்பாட்டு பணிப்பாளர் உட்பட எனது சக ஊழியர்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவிப்பதற்கு நான் இதனை வாய்ப்பாகக் கொள்கின்றேன். அரிமரம் மற்றும் மரத்தாலான உற்பத்திகளை வழங்குனராக தொடர்ந்தும் எம்மை குறித்து பக்கசார்புடன் கருதும் எமது வெற்றிக்கு அடித்தளம் இடும் எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் எமக்கு முடிந்தளவிலான மிகவும் சிறந்த முறையில் அவர்களுக்கு பெறுமதிவாய்ந்தவற்றை வழங்குவதற்கு நாம் எப்போதும் தயாராக உள்ளோம். இறுதியாக, 2018ஆம் ஆண்டினுள் எமது நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு தமது இடையறாத ஆதரவை வழங்கிய கௌரவ மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் அவர்கள், அமைச்சின் செயலாளர், வன திணைக்களத்தின் பாதுகாப்பு ஜெனரல் அவர்கள் மற்றும் அவரது பணிக்குழாத்தினர் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனமானது வெறும் இலாபம் ஈட்டுவதற்காக மாத்திரம் அல்ல, நாம் முழு நாட்டினதும் சூழலினதும் எதிர்காலத்தினை உறுதிப்படுத்தும் விதத்தில் வியாபாரத்தினை மேற்கொள்கின்றோம். ஆரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் உறுதிசெய்யப்பட்ட உங்களது பெறுமதிமிக்க பேண்தகு (பசுமைமிகு) மர உற்பத்திப ல தலைமுறையினருக்காகப் பாதுகாக்கப்படும் என்பது எமது எமது விருப்பமாகும்.



**குலாநிதி என்.டீ. ருவன்பத்திரண**
பொது முகாமையாளர்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்



## எமது பொறுப்புக்கள்

- காடுகளிலிருந்து மரங்களை வெட்டி அகற்றுதல், அம்மரங்களை அரிமரங்களாகவும் முடிவுப் பொருட்களாகவும் மாற்றுதல், மரக்குற்றிகள், அரிமரங்கள், முடிவுப் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் இக்காரியங்களுக்கான காட்டுப் பாதைகளை அமைத்தல்
- மரக்குற்றிகளாக்கும் அலகுகள், அரியும் ஆலைகள், எண்ணெய் இடுதல் மற்றும் பாதுகாத்தல் பொறித்தொகுதிகள், அரிமரங்களை உலர வைத்தல் மற்றும் உலரவைக்கும் சூளைகள் மற்றும் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், அமைத்தல், செயற்படுத்துதல்
- அரிமர மற்றும் விறகு விற்பனை நிலையங்களை நடாத்துதல்
- அரிமர உப பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல்
- அரிமரங்களை இறக்குமதி செய்தல்
- புதிய காடுகளை நடும் செயற்றிட்டங்களை ஆரம்பித்தல், மீள் நடுகைகளை மேற்கொள்ளல், காடு மற்றும் காட்டு நடுகைகளை விஞ்ஞான ரீதியாக முகாமைத்துவம் செய்தல்
- விவசாய உற்பத்திகள்
- அரிமரம் தொடர்பான முடிவுப் பொருட்கள் மற்றும் அரை முடிவுப் பொருட்கள் உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்
- தனியார் காணிகளிலிருந்து மரங்களைக் கொள்வனவு செய்தல்
- காடு சார்ந்த உற்பத்திகளைப் பதனஞ் செய்தல்
- பிரம்புகளை இறக்குமதி செய்தல்
- மாதிரிகளைப் பரீட்சிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிமரங்களை இனங் காணல் மற்றும் அரிமரச் சான்றிதழ்களை வழங்கல்
- அரிமரக் கைத்தொழில் சார்ந்த விடயங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல், சான்றிதழ்கள் வழங்குதல், சுற்றாடல் தொடர்பான அறிவுறுத்தல் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்
- கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களின் முழுப் பயனையும் பெற்றுக்கொள்வதற்காகத் திட்டமிடல் மற்றும் அதற்கு முதலீடு செய்தல்

## எமது வர்த்தகப் பெறுமானங்கள்

- சூழல் நேயம் மிகுந்த மற்றும் வர்த்தக ரீதியாக வெற்றிகரமாகச் செயற்படக்கூடிய அரசாங்கத்துறை நிறுவனமொன்றாக எமது நிலைப்பாட்டைப் பேணுவது எமது முதன்மையான பொறுப்பு என இனங்கண்டுள்ளோம்.
- சுத்தமான மற்றும் ஆரோக்கியமான சூழலைப் பாதுகாப்பதற்கு காடுகள் மற்றும் அரிமரங்களை அகற்றும் விஞ்ஞான ரீதியான முகாமைத்துவம் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய அவற்றை நிறைவேற்றுவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.
- எமது வாடிக்கையாளர்களுடன் நேர்மையான வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, அவர்களுக்கும் அனைத்து இலங்கையர்க்கும் பெறுமதிகளை உருவாக்குதல் எமது நிலைப்பாட்டின் முதன்மைக் காரணி என நாம் எற்றுக் கொண்டுள்ளோம்.
- திறன்களின் வளர்ச்சி, தொழில் அபிவிருத்தி, தொடர்ச்சியான கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றால் எமது ஊழியர்களின் விளைபயன் மட்டத்தை மேம்படுத்துவதற்கு செயற்படுகின்றோம்.
- வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறன் மற்றும் நேர்மையான சேவையை வழங்குவதற்கு எமது எல்லா காரியங்களிலும் அவர்களை முதன்மைப்படுத்தி செயற்படுகின்றோம்.
- அனைத்து செயற்பாடுகளின் போதும் மற்றும் சேவைகளை வழங்கும் போதும் தனிப்பட்ட விசுவாசத்தினை உயர் மட்டத்தில் பேணுவதாக உறுதிப்படுத்துகின்றோம்.
- எதிர்கால சந்ததியினரின் பெறுமதிமிக்க தேசிய மரபுரிமைகளான சூழல் மற்றும் வன வளங்களைப் பாதுகாத்தலும் விருத்தி செய்தலும் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட ஒழுங்குவிதிகளையும் சமூக விழுமியங்களையும் பின்பற்றுகின்றோம்.

# பணிப்பாளர் சபை - 2018

**திரு. கே.டப்ளியூ.சாந்த பண்டார**
தலைவர்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

**திரு. எச்.வை.ரீ. பவரகுமார**
செயற்படு பணிப்பாளர்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

**திரு. டீ. விஜேசிறிவர்தன**
பணிப்பாளர்
திறைசேரிப் பிரதிநிதி

**திரு. எஸ்.ஏ.ஏ. சத்துருசிங்க**
பணிப்பாளர்
வன பாதுகாப்பு ஜெனரல்

**திரு. எம்.வீ. கருணாரத்ன**
பணிப்பாளர்

**திரு. ரீ.பி. ரஞ்சன் பெர்னாண்டோ**
பணிப்பாளர்

**திரு. ஏ.எம்.சீ. பெரேரா**
பணிப்பாளர்



# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு 2018

**திருமதி. டப்ளியூ.டப்ளியூ.எம்.ஜே. குரே**
பிரதிப் பொது முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வு

**திரு. ஜீ.டீ.எஸ். குமாரசிங்க**
பிரதிப் பொது முகாமையாளர்- நிதி

**திரு. எம்.ஏ.சீ.என். சமரசிங்க**
பிரதிப் பொது முகாமையாளர் - மனித வளம் மற்றும் நிர்வாகம்

**திரு. ஏம்.சீ. தேவேந்திர**
பிரதிப் பொது முகாமையாளர் - இயக்கம்

**திரு. டப்ளியூ.பி. சமந்த**
பிரதிப் பொது முகாமையாளர் (பதில்) - சந்தைப்படுத்தல்

**திரு. ஜீ.ஜீ. திசர கமகே**
பிரதிப் பொது முகாமையாளர் (பதில்) - பொறியியல் மற்றும் உற்பத்தி

# 2018 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் சபை மீளாய்வு

2018 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடையும் நிதியாண்டிற்கான அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை முன்வைப்பதில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றனர்.

## கண்ணோட்டம்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 1968 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அரசாங்கத்திற்குரிய வர்த்தக நிறுவனமொன்றாகும். 1957இன் இல 49ஐக் கொண்ட அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ கூட்டிணைக்கப்பட்டது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம் பத்தரமுல்லை, “சம்பத்பாயா” வளாகத்தில் அமைந்துள்ளதுடன், அதன் உப பிரிவுகள் நாடளாவிய ரீதியிலும் அமைந்துள்ளன.

## முதன்மைச் செயற்பாடு

ஆரசாங்க மரக் கூட்டுத்தாபனம் தனது வருவாயினை முக்கியமாக அரிமரம் மற்றும் மரத்தாலான உற்பத்திகளை விற்பனை செய்வதன் மூலம் ஈட்டுகின்றது.

## வர்த்தக மீளாய்வு

2018ஆம் ஆண்டானது, இலங்கையில் அரசியல், பொருளாதார மற்றும் சுற்றாடல் நிலைமைகளின் துரிதமான மாற்றங்களின் காரணமாக சவால்மிக்கதொரு வருடமாக இருந்தது. ஆரசாங்க மரக் கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபையின் உபாயமிகு தீர்மானங்களுடன் அதன் வியாபாரங்களை நியாயமான முறையில் மேற்கொண்டதுடன், கடந்த வருடங்களில் போன்றே அதன் வருடாந்த வரவுசெலவு திட்டத்தினைப் பூர்த்தி செய்தது. கூட்டுத்தாபனத்தின் முகாமையினால் அமுல்படுத்தப்பட்ட உபாயங்களின் விளைவாக வருவாய் மற்றும் இலபாக் குறிகாட்டிகள் வரத்தகத்தின் நிலைப்பாடு மற்றும் செயலாற்றுகையினை உறுதிப்படுத்தின.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் முகங்கொடுத்த பாரிய சவாலானது, இயற்கையான அரிமர வளம், அதிகரிக்கும் சந்தைப் போட்டி, சந்தையில் உள்ள இயற்கையான வளங்களுக்கு கிடைக்கப்பெறும் பதிலீடுகள் என்பனவாகும். அரிதாக இருக்கும் அரிமரத்திற்கு தீர்வாக, அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் இலங்கைக்கு அரிமரங்களை இறக்குமதி செய்வதற்கு அதன் வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரித்துள்ளது. எவ்வாறெனினும், ஏனைய உள்நாட்டு இறக்குதியாளர்களின் விலையுடன் ஒப்பிடுகையில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் விலைகள் சிறிது உயர்வாகும். அரசாங்க நிறுவனமாக இருப்பினும் எவ்வித நிலைமையிலும் அவ்வாறான தரங்குறைந்த உற்பத்திகளை அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் ஒருபோதும் நாட்டிற்கு இறக்குமதி செய்ய முடியாது. இதன் விளைவாக, சிறந்த வர்த்தக ஒழுக்கவியலைப் பாதுகாப்பதன் மூலம் பொறுப்புள்ள நிறுவனமொன்றாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் இன்னும் அதன் நன்மதிப்பைப் பேணுகின்றது.

## நிதிசார் செயலாற்றுகை

| செயலாற்றுகை | 2018 | 2017 |
|---|---|---|
| | மி.ரூ | மி.ரூ |
| விற்பனைப் புரள்வு | 4,069 | 4,254 |
| மொத்த இலாபம் | 1,965 | 2,076 |
| ஏனைய செயற்படு வருமானங்கள் | 73 | 103 |
| செயற்படு இலாபம் | 358 | 693 |
| செயற்பாடற்ற இலாபம | 315 | 274 |
| திறைசேரியினால் விதிக்கப்பட்ட அறவீடு | 100 | 100 |
| வரி மற்றும் அறவீடுகளுக்கு முன்னரான தேறிய இலாபம் | 672 | 967 |



வருடத்தில் கூட்டுத்தாபனத்தின் விற்பனைப் புரள்வானது கடந்த ஆண்டின் 4,254 ரூபாவுடன் ஒப்பிடுகையில் 4,069 ரூபாவிற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. மொத்த விற்பனைப் புரள்வு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4%ஆல் குறைவடைந்துள்ளது. கடந்த வருடத்தின் 2,076 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்திற்கான மொத்த இலாபம் 1,965 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், அது 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது.







மீளாய்வாண்டின் வரி மற்றும் அறவீடுகளுக்கு முன்னரான தேறிய இலாபமான 672 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன் கடந்த ஆண்டின் 967 மி. ரூபாவுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான வரி மற்றும் அறவீடுகளுக்கு முன்னரான தேறிய இலாபம் 295 மில்லியன் ரூபாவால் குறைவடைந்துள்ளது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் உயர் இலாபங்களை ஈட்டும் நோக்கில் மாத்திரமல்லாது பொறுப்புவாய்ந்த ஒரு நிறுவனமாக எப்போதும் முன்னிலையில் செயற்படுகின்றது. இலங்கையில் வேலையில்லா பிரச்சினையின் உயர் வீதத்தினைக் குறைப்பதற்கு அரசாங்கத்திற்கு உறுதுணையாக அதிகமான வேலை வாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் சந்தைக்கு தரமான உற்பத்திகளை வழங்குதல் தமது பொறுப்பு என்பதை அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் நம்புகின்றது. அதனால், 2,000 .ற்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புக்களை ஒவ்வொரு வருடமும் வழங்குவதன் மூலம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் வேலைவாய்ப்பிற்கான உயர் ஆகுசெலவினை மேற்கொள்ள வேண்டி உள்ளது. மீளாய்வாண்டிற்கான 2,104 மி. ரூபா விற்பனைக் கிரயத்திற்கு மேலதிகமாக நிர்வாக, விற்றல் மற்றும் விநியோகித்தல் செலவினங்களாக 1,680 மில்லியன் ரூபாவினை அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டது. ஊழியர்களின் நலனிற்காக 1,602 மில்லியன் ரூபா மொத்த மொழில்வாய்ப்புக் கிரயமாகச் செலவிடப்பட்டுள்ளது.










2018இல் திறைசேரிக்கு செலுத்திய விசேட வரி, வருமான வரிகள், தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட எல்லா செலவினங்களையும் கழித்ததன் பின்னர், அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் தேறிய இலாபம் 322 மில்லியன் ரூபாவாகும். இவ்வருடத்தின் செயலாற்றுகையினை மதிப்பீடு செய்வதன் மூலம் அதிகரித்து வரும் உலகாளாவிய மற்றும் உள்ளூர் சந்தைப் போட்டிகளைச் சமாளிப்பதற்கு வர்த்தகச் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கும் வர்த்தக நடவடிக்கைகளைப் பல்வகைப்படுத்தவும் எமது எல்லா ஆற்றல்களையும் பயன்படுத்த நாம் கவனத்திற் கொள்கின்றோம். அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் உள்ளூர் சந்தைக்காக விசேடமாக வீருத்தி செய்யப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளுக்கான பலம்வாய்ந்த கேள்வியினைத் தொடர்ந்தும் பெறுகின்றது.

தனது சொத்துக்களைப் பயன்படுத்தவதன் மூலம் கூட்டுத்தாபனத்தால் எவ்வாறு இலாபத்தினை ஈட்ட முடிந்தது என்பதை சொத்துக்கள் மீதான நன்மைகள் விகிதம் பிரதிபலிப்பதுடன், 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளுக்கான சொத்துக்கள் மீதான நன்மைகள் மற்றும் உரிமையாண்மை மீதான நன்மைகள் பின்வருமாறு:

| | சொத்துக்கள் மீதான நன்மைகள் | உரிமையாண்மை மீதான நன்மைகள் |
|---|---|---|
| 2017 | 3.8% | 5.7% |
| 2018 | 6.6% | 9.2% |

மீளாய்வாண்டின் போது 6.6% சுழுயு விகிதத்தினையும் 9.2% சுழுநு விகிதத்தினையும் அடைய முடிந்ததுடன், கடந்த வருட செயலாற்றுகையுடன் ஒப்பிடுகையில் அது முறையே 72% மற்றும் 61% அதிகரிப்பாகும். மீளாய்வாண்டுக் காலப்பகுதிக்கான அரசாங்க வருவாய்க்கு கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு திறைசேரி வரியா்க 100 மில்லியன் ரூபா பங்களிப்பதன் மூலம் 2,199 மில்லியன் ரூபாவாகும்.

எமது வளர்ச்சி உபாயமானது புத்தாக்கமிக்க உற்பத்தித் தொகுதிகளை மேம்படுத்துதல், விரயத்தைக் குறைத்தல், வன்மரங்களுக்கு பதிலீடுகளை அறிமுகப்படுத்துதல், பெறுமதிமிக்க அரிமர வகைகளை நடுவதற்கு மக்களை ஆரவமூட்டுதல், வெளிநாட்டு நாணயத்தினை ஈட்டுவதற்கு ஏனைய நாடுகளிலிருந்து ஓடர்களைப் பெறுவதற்கு விசேட ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுதல் போன்றவற்றில் கவனஞ் செலுத்துகின்றது. குறுகிய மற்றும் நடுத்தர காலத்திற்கு கூட்டுத்தாபனத்தின் சக்திமிக்க வளர்ச்சியினை நீடித்து விலைக்க நாம் எதிர்பார்க்கின்றோம்.

## உற்பத்தி

செயற்பாட்டு செயன்முறையைச் சூழல் நேயமிக்க முறைமைகள் ஊடாக மேற்கொண்டு உயர் உற்பத்தி மட்டத்தினைப் பேணுதல் நிறுவனத்தின் நிலைப்பாட்டினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், இலாபத்தினை அதிகரித்துக் கொள்வதற்கும், நிறுவனத்தின் உள்ளக மற்றும் வெளி அங்கங்களின் சிறந்த நிலைப்பாட்டிற்கும் பிழைப்பிற்கும் இலாபத்திற்கும் முக்கியமானது என்பது எமது கடும் நம்பிக்கையாகும்.

எதிர்கால சந்ததியினர் அவர்களது சொந்தத் தேவைகளை விட்டுக் கொடுக்காது எமது தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இயற்கை வளங்களை பேண்தகு முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்யும் நிறுவனத்தின் உபாய முறைகளுள் கூட்டுத்தாபனம் சூழல்சார் கருத்தினை ஒருங்கிணைப்பதற்காக அதன் ஆற்றலை தொடர்ந்தும் விருத்தி செய்கின்றது.

பேண்தகு அபிவிருத்தி முயற்சிகளுக்கு முன்னுரிமை அளித்து செயற்படு கட்டமைப்புக்கள், முறைமைகள், ஆளணியினர் மற்றும் உற்பத்தி வழிமுறைகள் தொடர்பில் நாம் புதிய தொழில்நுட்பங்களை தொடர்ந்தும் கையாளுகின்றோம். அரசாங்க சட்ட திட்டங்களுக்கு இணங்க, வேலைத்தள வகைப்படுத்தல் சரிப்பார்த்தற் பட்டியலைத் தயாரித்தல், விஞ்ஞாக முறையில் அரிமரங்களை வெட்டுதல், முறையான அரிமரப் பரிகரிப்பு மற்றும் பாதுகாப்பு உத்திகள், எல்லா இயந்திரோபகரணங்களின் முறையான ஸ்தாபிப்பு, நிறுவுகை மற்றும் பராமரிப்பு, அதிநவீன ஆட்சேர்ப்பு மற்றும் அபிவிருத்திச் செய்னமுறைகள் என்பன் குறுங்கால மற்றும் நெடுங்கால குறிக்கோள்களை அடைவதற்கு பேண்தகு முறையில் துணையாக உள்ள தந்திரோபயங்களாகக் கருதப்படும். ‘‘பேண்தகு வன முகாமைத்துவம;’’ குறித்து நாம் சட்டபூர்வமாகப் பொறுப்புடையவராவோம்.

விஞ்ஞான முறையிலான அரிமர வெட்டுகையானது பயிர்ச் செய்கையின் பௌதிக மற்றும் உயிரியல் தன்மை, குறிப்பிட்ட பயிர்ச்செய்கையின் அடியில் வளரும் தாவரங்கள், இயற்கை வனப் பகுதிகள் மற்றும் மீதம் வைக்கவேண்டிய வளர்ப்புப் பயிர்கள், காற்றின் திசை, நிலத்தின் சாய்வு, மண்ணின் தன்மை மற்றும் நீர் நிலைகள் போன்ற பல காரணிகளை மரம் வெட்டுவதற்கு முன்னர் மதிப்பீடு செய்யும். இது சுற்றாடல் சீரழிவினைக் குறைப்பதற்கும் காபன் தடத்தினைக் குறைப்பதற்கும் பெரிதும் செல்வாக்குச் செலுத்தும்.

மேலும், பிரதான உற்பத்தியில் இருந்து வெட்டடி அகற்றப்படும் அரிமரத்துண்டுகள் மீண்டும் ‘‘பிங்கர் ஜொயின்ட்’’ (Finger Joint) பலகைகள் செய்வதற்கு பயன்படும். இவை தளபாட உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

கூட்டுத்தாபனம் பல்வேறு காலப்பகுதிகளில் அதன் நிலைப்பாட்டிற்கு குறுகிய மட்டத்திலிருந்து பாரிய மட்டத்தில் ஆபத்திற்கு உள்ளாக்கக்கூடிய் பல்வேறு பிரச்சினைமிகு சந்தர்ப்பங்களுக்கு தொடர்ந்தும் முகங்கொடுக்கின்றது. கடல் மட்டத்தில் இருந்து 5000 அடி உயரத்தில் மேற்கொள்ளப்படும் மரம் வெட்டுதலைத் தடை செய்தல், வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் விடுவிக்கப்பட்டுள்ள முதிர்ச்சியடைந்த வனப்பயிர்ச்செய்கை நில அளவு குறைவடைதல், அரச பெருந்தோட்டக் கம்பனிகள் அவற்றின் அரிமரங்களை திறந்த சந்தையில் விற்பனைக்கு விடத் தீர்மானித்தல், அரிமரம் மற்றும் மரத்தாலான உற்பத்திகளுக்கு பல்வேறு பதிலீடுகள் சந்தையினுள் அதிகரித்தல் போன்றன் 2018ஆம் ஆண்டில் வெளிச் சூழலிலிருந்து வரும அச்சுறுத்தல்களாக இனங் காணப்பட்டுள்ளன.



### அரச காடுகளிலிருந்து அரிமரங்களை வெட்டுதல்

வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் விடுவிக்கப்பட்டுள்ள முதிர்ச்சியடைந்த வனப்பயிர்ச்செய்கை நில அளவு குறைவடைதல் நாம் அண்மைக்காலத்தில் எதிர்கொண்ட பிரதான தடையாகும். கூடுதலான வனப் பெருந்தோட்டங்களை விடுவிப்பதற்கு வன திணைக்களத்துடனும் பொதுத் திறைசேரியுடனும் நாம் தேவையான ஏற்பாடுகளை செய்ய வேண்டி இருந்ததுடன், பரிகரிக்கப்படாத மின்மாற்றிக் கம்பங்கள், சிலிப்பர்கள் ஆகியவற்றை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்வதற்கும் இலங்கை புகையிரதத் திணைக்களம் மற்றும் காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவுடன் அவர்களின் நிலங்களிலிருந்து அரிமரங்களை வெட்டி எடுப்பதற்கு பேச்சுவார்த்தை மேற்கொள்ளவும் நேர்ந்தது.

வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் மூலம் தேசிய வன முகாமைத்துவ திட்டத்தின் பிரகாரம் வெட்டுவதற்காக தேக்கு, பைனஸ், யூக்கலிப்டஸ் போன்ற காட்டு மரங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் மரங்களை வெட்டுவதற்கு விடுவிக்கப்பட்டுள்ள வன முகாமைத்துவப் பகுதிகள் கீழே குறித்துக் காட்டப்பட்டுள்ளன.

| மர இனம | முற்றாக வெட்டுதல் (ஹெ.) | | மெல்லியதாக்குதல் (ஹெ.) | |
|---|---|---|---|---|
| | 2018 | 2017 | 2018 | 2017 |
| தேக்கு | 836.4 | 569.8 | 225 | 375.9 |
| யூகலிப்டஸ் | 73 | 210.7 | 526 | 515.0 |
| பைனஸ் | 124.3 | 160.2 | - | - |
| காயா | - | - | 37 | 20.0 |
| எக்கேஷியா | 65.1 | 30.0 | - | - |

### மரக்குற்றிகளை அரிமரத்துண்டங்களாக்குதல்

2017ஆம் வருடத்தின் உற்பத்தி 4,909 கன மீற்றருக்கு மாறாக 2018ஆம் வருடத்தில் 4,389 கன மீற்றர் மரத்துண்டங்கள் அரியும் ஆலைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், நாடு முழுதும் அமைக்கப்பட்டுள்ள ளுவுஊ டிப்போகளிலிருந்து 3,059 கன மீற்றர் அரிமரத்துண்டங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### மின்கம்பங்கள் மற்றும் சிலிப்பர் கட்டைகளைப் பரிகரித்தல்

மீளாய்வாண்டின் போது 43,651 சிலிப்பர் கட்டைகள், 9,850 மின்கம்பங்கள், 17,155 யானை வேலிக் கம்பங்கள் என்பன அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கல்தமுல்லை, கெப்பெட்டிபொலை, பூசா ஆகிய பரிகரிப்பு நிலையங்களில் பரிகரிப்பு செய்யப்பட்டன. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது சிலிப்பர் கட்டைகளின் உற்பத்தி 48.9மூஆல் அதிகரித்துள்ளது. மின்மாற்றிக் கம்பங்கள் மற்றும் யானை வேலிக் கம்பங்களின் உற்பத்தி மின்சார சபை மற்றும் வனஜீவி திணைக்களத்தின் கேள்வி குறைவடைந்ததன் காரணமாக கடந்த ஆண்டின் முறையே 20,186 மற்றும் 33,424 உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவில் இவ்வாண்டில் குறைவடைந்துள்ளது.

### தளபாட உற்பத்தி

அரசாங்க மரக கூட்டுத்தாபனத்தின் அம்பாறை, பூசா, கல்தமுல்லை ஆகிய தளபாட உற்பத்தி நிலையங்களிலிருந்து 232.2 மில்லியன் ரூபா பெறுமதியான தளபாடங்கள் 2018ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அத்துடன் இவ்வாண்டில் 301.90 மில்லியன் ரூபா (வரிகளற்ற) பெறுமதிமிக்க தளபாடங்கள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் இரத்மலானை, கண்டி, இரத்தினபுரி, தலல்ல, அம்பாறை, பூசா, நுகேகொடை ஆகிய ளுவுஊ தளபாட காட்சியறைகளிலிருந்து விற்பனை செய்யப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் தளபாட உற்பத்தி 21% ஆல் குறைவடைந்துள்ளது.

### 2017 - 2018ஆம் வருடங்களில் உற்பத்தி, விற்பனை, வருமானம

| | உற்பத்தி அளவு | | விற்பனை அளவு | | மொத்த விற்பனைப் புரள்வு (வரியுடன்) | |
|---|---|---|---|---|---|---|
| | 2018 | 2017 | 2018 | 2017 | 2018 | 2017 |
| | | | | | மி. ரூபா | மி. ரூபா |
| குற்றிகள் க.மீ. | 130,040 | 146,094 | 115,471 | 131,518 | 3,249.2 | 3,653.7 |
| மரத்துண்டங்கள் க.மீ. | 4,389 | 4,909 | 3,059 | 2,997 | 268.5 | 290.2 |
| சிலிப்பர் கட்டைகள் எண். | 43,651 | 7,416 | 45,301 | 14,322 | 499.2 | 153.1 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மின்கம்பங்கள் எண். | 9,850 | 20,186 | 11,733 | 19,484 | 120.1 | 197.8 |
| யானை வேலிக் கம்பங்கள் எண். | 17,155 | 33,424 | 34,493 | 25,616 | 131.5 | 88.9 |
| வேலிக் கம்பங்கள எண். | 112,837 | 141,790 | 114,058 | 132,863 | 20.4 | 21.3 |
| விறகு க.மீ. | 101,172 | 126,861 | 95,680 | 119,669 | 57.7 | 64.5 |
| வேலிக் கம்பங்கள் எண். | 125,967 | 114,681 | 89,917 | 103,516 | 11.7 | 13.9 |

## வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்களை நிர்வகித்தல்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவு கூட்டுத்தாபனத்தின் வர்த்தகத்தினையும் பணியினையும் மேம்படுத்துவதில் முக்கிய வகிபங்கினை மேற்கொள்கின்றது. ஒரு குழவாக நாம், எமது குறிக்கோள்களை அடைவதற்கு பின்வரும் முக்கிய செயற்பாடுகளை மேற்கொள்கின்றோம்.

- ஓர் உற்பத்திக்கான தேவையினை நுகர்வோர் ஆய்வு மற்றும் சந்தையில் அதனையொத்த பொருட்களின் விற்பனை முறைகளை அவதானிப்பதன் மூலம் தீர்மானித்தல்.
- நுகர்வோரின் தேவைகள் மற்றும் விருப்புகளுக்கு ஒத்து போகும் புதிய உற்பத்திகளை உருவாக்குதல் அல்லது ஏற்கனவே உள்ள உற்பத்திகளை மாற்றியமைத்தல்.
- சாத்தியமான வாடிக்கையாளரை எமது உற்பத்திகள் குறித்து விழிப்பூட்டவும் அவற்றை அவர்கள் வாங்குவதற்கு வழிப்படுத்தவும் மிகச் சிறந்த அணுகுமுறையினைத் தீர்மானித்தல்.
- வாடிக்கையாளரை அடைவதற்கு வினைத்திறன்மிக்க விதத்தில் சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களை உருவாக்குதல்.

இலாபம் ஈட்டும் அரச நிறுவனமாக, இவ்வாண்டில் நாம் இனங்கண்ட பிரதானமான ஆபத்து, சிறிய அளவிலான தொழில்முனைவோர் தளபாட கைத்தொழிற்றுறையில் நாம் தொழிற்படும் அதே சந்தைப் பிரிவில் செயற்படுவதற்கு உபாயங்களுடன் முன்வருதல் ஆகும். நவீன தளபாட வடிவமைப்புகளை தற்போதைய சந்தை போக்குகளுக்கு ஒத்துப் போகும் வகையில் குறைந்த விலையில் அறிமுகப்படுத்தவதன் மூலம் அவர்கள் உயர் நிலை வாடிக்கையாளர்களைக் குறிவைக்கும் உத்திகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆகவே, இதனைத் தடுக்கவும் மற்றும் இக்கைத்தொழிற்றுறையில் முக்கியமான செயற்பாட்டாளர்களுடன் போட்டியிடவும், அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அதன் உற்பத்திகளின் தரம், விசேடமாக நாம் பயன்படுத்தும் அரிமரத்தின் தரத்தினை உறுதிப்படுத்துவதன் மூலம் சந்தைப்படுத்தல் உத்திகளை விருத்தி செய்துள்ளது. மேலும், எம்மிடத்தில் இவ் ஆபத்தினை ஈடு செய்ய எதிர்பார்க்கக்கூடிய பல்வகைக்குட்ப்பட்ட உற்பத்தித் தொடர் உள்ளது.

### 2018இல் வருவாய்க்கு ஞவுஊ உற்பத்திகளின் பங்களிப்பு




பல்வகையான உற்பத்தித் தொகுதிகளை வழங்குவதுடன், போட்டியில் தனித்து நிற்க நன்னு தகுதிவாய்ந்த வடிவமைப்புக் குழுவினால் வாடிக்கையாளர் தேவைகளுக்கு ஏற்ப தளபாடங்களை செய்து வழங்குவதற்கு முனைகின்றோம். நாம் முகங்கொடுக்கும் அடுத்த மிகப் பெரிய சவாலானது, உச்ச மட்டத்தினை இன்னும் அடையாத விருத்தியடையாத கைத்தொழிற்றுறையில் நாம் செயற்பட வேண்டி உள்ளதாகும். அதன் விளைவாக, மர வளங்கள் குறைவாகப் பயன்படுத்தச் செய்யும் வகையில், அறுவடைச்செய்யப்படும் அரிமரம் நாட்டுக்குள்ளேயே பயன்படுத்தப்படுகின்றது. வனப் பெருந்தோட்டங்களில் இருந்து அறுவடை செய்யப்படும் அரிமரம் மற்றும் ஏனைய வன்மரக் குற்றிகள் என்பன தற்போதைய கைத்தொழிற்றுறை கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்கு உயர் தரத்தினைக் கொண்டிருப்பதில்லை. ஆவை மோசமடைவதற்கு முன்னர் விற்பதற்காக தரமிறக்க வேண்டியுள்ளது. எனவே, சில சந்தர்ப்பங்களில் எம்மால் உற்பத்திக் கிரயத்தை ஈடுசெய்ய முடியாதுள்ளது. ஏற்கனவெ குறிப்பிட்டவாறு, கைத்தொழிற்றுறையினுள் வேறுபட்ட துறைகளில் வளர்ந்துவரும் அதிக எண்ணிக்கையிலான சிறிய அளவிலான தொழில்முனைவோரும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான பெரிய தொழில்முனைவோரும் காரணமாக இலங்கையின் பின்னணியில் அரிமரம் மற்றும் மரத்தாலான உற்பத்திச் சந்தை மிகவும் போட்டிமிக்கதாக உள்ளது. எவ்வாறெனினும், 2018இல், ஞவுஊஇனால் அதன் ஒவ்வொரு சந்தைப் பிரிவிலும் கணிசமான அளவு சந்தைப் பங்கினைப் பின்வருமாறு பெற்றுக்கொள்வதற்கு முடிந்துள்ளது.

- தளபாடம் தவிர்ந்த குற்றிகள், மரத்தண்டங்கள் மற்றும் ஏனைய உற்பத்திகளின் 13% சந்தைப் பங்கு
- தளபாடத் தொழிற்றுறையில் 0.5% சந்தைப் பங்கு
- மரப்பலகைத் தொழிறறுறையில் 12.29% சந்தைப் பங்கு

மின்மாற்றிக் கம்பங்கள், யானைவேலிக் கம்பங்கள், சிலிப்பர்கள் வழங்கலில் STC ஏக உரிமையினைக் கொண்டிருப்பதால், குறிப்பிட்ட நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப உரிய நேரத்தில் உறுதிப்படுத்துவதற்கு நாம் கடப்பாடு கொண்டுள்ளதுடன், சமூக பொறுப்பினை உருவாக்கும் சில இனங்களின் குற்றிகள் மற்றும் மரத் துண்டங்கள் B2B வியாபாரத்தினூடாக தொழில்முனைவோரின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு தேவையான உதவி மற்றும் வழிகாட்டலை வழங்குவதற்கு நாம் எப்போதும் முயற்சிக்கின்றோம். அதற்கு அப்பால், நாங்கள் சந்தையின் கணிசமான அளவினை வழங்குவதால், குற்றிகள் மற்றும் மரத்துண்டங்கள் துறையில் விலைகளின் மீது நாம் கட்டுப்பாட்டினைக் கொண்டுள்ளோம். எனவே நாம் தொழிற்றுறையில் விலை நிர்ணயிப்பாளராக செயற்படுகின்றோம்.

“எந்தவொரு வியாபாரத்திற்கும் வாடிக்கையாளர்கள் முதுகெலும்பாவர்.” அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிறுவனங்கள் பொருட்களை உற்பத்தி செய்கின்றனர். ஒவ்வொரு நிறுவனமும் தமது போட்டியாளர்களை வெற்றி கொண்டு விற்பனைகள் மூலம் தமது சந்தைப் பங்கினை அதிகரித்துக் கொள்வதற்கு விரும்பும். இதனை அடைவதற்கு, STC வினைத்திறன்மிக்க மற்றும் விளைபயன்மிக்க சந்தைப்படுத்தல் திட்டத்தினை செயற்படுத்தியது. வெற்றிமிகு சந்தைப்படுத்தல் திட்டத்தின் மிகவும் இன்றியமையாத கூறானது எமது வாடிக்கையாளரின் விருப்புகள், வெறுப்புகள் மற்றும் எதிர்பார்ப்புகளை அறியும். ஆதனால், இப்புதிய சந்தைப்படுத்தல் திட்டத்தின் ஊடாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 4Pயின் (Product,Price, Place, Promotion) ஒவ்வொரு அம்சத்தையும் கையாள முயற்சித்துள்ளது. அவையாவன,

- விநியோகிப்பிற்கான புதிய வழிகள்
- வாடிக்கையாளர் மைய உற்பத்தித் திட்டம்
- விலையில் மாதிரியில் சிறிய மாற்றம்
- புதிய விளம்பர உத்திகள்

2018இல் STCயின் முக்கிய அடைவானது, தகவ்களை சேகரிக்க, விலைகளை ஒப்பிட, பொருட்களை ஓடர் செய்ய முதலில் இணையத்தின் பால் திரும்பும் ஆயிரக்கணக்கான கொள்வனவாளர்களை ஈர்ப்பதற்கு எமது இணையத்தள அங்காடி ஊடாக ஒன்லைன் தளபாட வர்த்தகத்தை ஆரம்பிக்க எம்மால் முடிந்தமை ஆகும்.

### அடைவுகளுடனான இலக்குகளைக் கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல்

உற்பத்தி செயலாற்றுகை, நிதிசார் செயலாற்றுகை மற்றும் கடந்த மாதங்களின் விற்பனைகள் குறித்து கலந்துரையாடுவதற்கும் இனங்காணப்படும் தடைகளையும் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு தீர்மானங்கள் எடுக்கவும் தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ் அனைத்து முகாமையாளர்களுடன் மாதாந்தம் ஒரு முறை கூட்டுத்தாபனத்தின் முகாமை சந்திக்கின்றது. அத்துடன், எதிர்காலத் திட்டங்கள், இலக்குகள், வாய்ப்புகள், புதிய கருத்துகள், மாற்றங்கள் எனபனவும் முகாமையினால் கலந்துரையாடப்பட்டு கூட்டுத்தாபனத்தின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் ஆகியவற்றை அடைவதற்கும் நிதி ரீதியான சாத்தியமான அமைப்பொன்றாக கூட்டுத்தாபனம் இயங்கும் நோக்கில் தேவையான காசுப் பாய்ச்சல் குறித்து தெளிவாக உணரவும் பொருத்தமான வழிமுறைகள் வழங்கப்படும்.

பணிப்பாளர் சபை சார்பாக ஒப்பமிடப்பட்டது.

**திரு கே.டப்ளியூ. சாந்த பண்டார**
**தலைவர்**
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

# எங்கள் அடைவு




## அம்பாறைப் பிராந்தியம்






## அனுரதாபுரப் பிராந்தியம்






## பண்டாரவளைப் பிராந்தியம்





## கொழும்புப் பிராந்தியம்



மீரிகம டிப்போ
கடவத்தை டிப்போ

பன்னிப்பிட்டி டிப்போ

கல்தமுல்லை புதிய டிப்போ
கல்தமுல்லை அரிமர ஆலை
இரத்மலானை டிப்போ
இரத்மலானை காட்சியறை
இரத்மலானை அரிமர ஆலை
கொழும்புப் பிராந்திய அலுவலகம்

எகொடஉயன டிப்போ
மொறட்டுமுல்ல டிப்போ
வில்லோராவத்த டிப்போ



## குருணாகலைப் பிராந்தியம்



புத்தளம் டிப்போ

நிக்கவரட்டி டிப்போ

மெல்சிறிபுர டிப்போ
மெல்சிறிபுர அரிமர ஆலை

பிங்கிரிய டிப்போ

கங்காணியாமுல்ல டிப்போ
நைனாமடம டிப்போ

குருணாகலைப் பிராந்திய அலுவலகம்
குருணாகலை டிப்போ



## யாழ்ப்பாணப் பிராந்தியம்



யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகம்
யாழ்ப்பாண டிப்போ

நல்லூர் டிப்போ

கிளிநொச்சி டிப்போ



## மொணறாகலைப் பிராந்தியம்



மொணறாகலைப் பிராந்திய அலுவலகம்

புத்தல டிப்போ

வெல்லவாய டிப்போ



## கண்டிப் பிராந்தியம்



தம்புளுஓய டிப்போ

மாத்தளை டிப்போ

பல்லேகலே டிப்போ
கண்டிப் பிராந்திய அலுவலகம்
கண்டி காட்சியறை

நெலுந்தெனிய டிப்போ

எத்கால டிப்போ
எத்கால அரிமர ஆலை



## மாத்தறைப் பிராந்தியம்



பூசா டிப்போ
பூசா அரிமர ஆலை
பூசா காட்சியறை

அம்பலாங்கொடை டிப்போ



மாத்தறைப் பிராந்திய நிலையம்
தலல்ல டிப்போ
தலல்ல காட்சியறை
அம்பாந்தோட்டை டிப்போ

## நுவரெலியா பிராந்தியம்






## பொலன்னறுவைப் பிராந்தியம்






## இரத்தினப்புரிப் பிராந்தியம்






# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டியின் அறிக்கை

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி உறுப்பினர்கள் - 2018**

திரு. ட. விஜேசிறிவர்தன - தலைவர்

திரு. எஸ்.ஏ.ஏ. சத்துருசிங்க - உறுப்பினர்

திரு. எம்.வீ. கருணாரத்ன - உறுப்பினர

**கமிட்டியின் வகிபங்கு**

நிதிசார் அறிக்கையிடல் மற்றும் கணக்காய்வு செயன்முறைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் சிறந்த உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ முறையினைப் பேணுதல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வுக் கமிட்டி பணிப்பாளர் சபைக்கு தமது கண்டுபிடிப்புக்களை அறிக்கையிடுகின்றது.

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி கூட்டங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடைபெற்றன. பின்வரும் பரிந்துரைகள் பணிப்பாளர் சபையின் அனுமதிக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. மாதாந்த நிதி மற்றும் பௌதிக செயலாற்றுகை
2. வருடாந்த கணக்குகள்
3. வருடாந்தப் பாதீடு மற்றும் திருத்தப்பட்ட பாதீடு
4. உள்ளகக் கணக்காய்வு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு விசாரணைகளும் பதில்களும்
5. பணிக்குழாம் மற்றும் நிர்வாக விடயங்கள்
6. சட்ட நடவடிக்கைகள்
7. ஊழியர் கடன்கள், முற்பணம் மற்றும் வழங்கப்பட்ட விலைமனுக்கள் போன்ற ஏனைய விடயங்கள்

**ட. விஜேசிறிவர்தன**
தலைவர் - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி





# வர்த்தகப் பொழிப்பு

## வருமான வளர்ச்சிப் போக்குப் பகுப்பாய்வு







## இலாப வளர்ச்சிப் போக்குப் பகுப்பாய்வு










## உற்பத்தி வளர்ச்சிப் போக்குப் பகுப்பாய்வு



















## பெறுமதி கூட்டல்




2016




2017




2018

## மூலதனச் செலவினம் - 2018

| விபரம் (1மி. ஐ விடக் கூடுதலான) | ரூபா |
|---|---|
| பிராந்திய அலுவலகக் கட்டட நிர்மாணிப்பு - பண்டாரவளைப் பிராந்தியம் | **25,721,558** |
| பன்னிபிட்டியாவில் அலுவலகம் மற்றும் விடுதி நிர்மாணிப்பு - கொழும்புப் பிராந்தியம் | 12,285,226 |
| தலல்லவில் காட்சியறைக் கட்டட நிர்மாணிப்பு - மாத்தறைப் பிராந்தியம் | 10,499,908 |
| திபொல்கெட்டியவில் டிப்போ அலுவலக வளாக நிர்மாணிப்பு - இரத்தினபுரி பிராந்தியம் | 8,275,819 |
| கும்புக்கணவில் யுசுஆ அலுவலக நிர்மாணிப்பு - மொணறாகலைப் பிராந்தியம் | 7,977,115 |
| பதியதலாவ டிப்போ அலுவலக வளாக நிர்மாணிப்பு - அம்பாறைப் பிராந்தியம் | 5,925,072 |
| விலன்குளம டிப்போவிற்கு அடுக்கிவைக்கும் கொட்டகை - பொலன்னறுவை பிராந்தியம் | 5,818,931 |
| கல்தமுல்லை தொகுதியில் கல்தமுல்லை பதனிடும் பொறித்தொகுதிக்கு அடுக்கிவைக்கும் கொட்டகை | 5,345,449 |
| அம்பாறையில் ஊழியர் மனைகள் - அம்பாறைப் பிராந்தியம் | 5,159,443 |
| கொங்கிரீட் பாதை - இரத்தினபுரி பிராந்தியம் | 2,577,665 |
| அம்பாறை டிப்போவில் வேலி மற்றும் பிரதான வாயில் - அம்பாறைப் பிராந்தியம் | 1,713,889 |

## முதலீடுகள்

| | 31-12-2018 | 31-12-2017 |
|---|---|---|
| அரச நிறுவனங்களில் தற்காலிக மேலதிக நிதியம் | 457,962,079 | 431,403,535 |
| மக்கள் வங்கி | 740,849,636 | 367,323,062 |
| காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்தி (பிரைவட்) லிமிட்ட் | 500,000 | 500,000 |
| இலங்கை வங்கி | 831,506,739 | 1,327,057,585 |
| அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி | 187,946,304 | 173,287,242 |





# ஒரே பார்வையில் பத்தாண்டு காலம்

| (முழுமையான பெறுமதிகள்) | | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருடத்திற்கான முழு வருமானம் | Rs. '000 | 3,445,141 | 3,616,164 | 3,103,744 | 3,563,390 | 3,213,644 | 3,756,482 | 4,132,052 | 4,522,238 | 4,630,718 | 4,457,024 |
| வருடத்திற்கான மொத்த இலாபம் | Rs. '000 | 1,351,695 | 1,365,285 | 1,237,640 | 1,546,107 | 1,197,615 | 1,453,451 | 1,757,115 | 2,045,090 | 2,075,950 | 1,964,647 |
| அறவீடு மற்றும் வரிகளுக்கு முன்னர் தேறிய இலாபம் | Rs. '000 | 810,612 | 877,623 | 603,499 | 801,681 | 382,337 | 427,222 | 768,699 | 659,732 | 966,804 | 672,433 |
| மொத்த தொழில்வாய்ப்புக் கிரயம் | Rs. '000 | 898,652 | 901,910 | 953,498 | 1,065,052 | 1,117,036 | 1,254,516 | 1,449,746 | 1,789,572 | 1,572,775 | 1,553,598 |
| வருடாந்த மூலதனச் செலவினங்கள் | Rs. '000 | 112,909 | 237,332 | 180,546 | 162,509 | 332,870 | 115,132 | 244,929 | 113,675 | 94,637 | 116,034 |
| வருட இறுதியில் நடைமுறையற்ற சொத்துக்கள் | Rs. '000 | 1,793,467 | 1,801,988 | 1,739,893 | 1,479,880 | 1,658,535 | 1,654,908 | 1,743,580 | 1,732,640 | 1,894,597 | 1,978,855 |
| வருட இறுதியில் நடைமுறைச் சொத்துக்கள் | Rs. '000 | 2,079,543 | 2,341,020 | 2,177,892 | 2,929,185 | 3,153,777 | 4,004,860 | 4,115,259 | 3,652,116 | 4,423,105 | 4,541,610 |
| வருட இறுதியில் நடைமுறைப் பொறுப்புக்கள் | Rs. '000 | 1,028,979 | 1,034,258 | 497,229 | 804,102 | 1,050,258 | 1,591,991 | 1,480,966 | 897,087 | 1,234,716 | 1,047,668 |
| வருட இறுதியில் நடைமுறையற்ற பொறுப்புக்கள் | Rs. '000 | 364,553 | 399,057 | 399,953 | 409,030 | 384,831 | 484,649 | 424,854 | 499,373 | 852,292 | 812,441 |
| வருட இறுதியில் உரிமையாண்மை | Rs. '000 | 2,479,478 | 2,709,694 | 3,020,602 | 3,195,933 | 3,377,223 | 3,583,129 | 3,953,019 | 3,988,297 | 4,230,694 | 4,660,357 |
| ஒன்றிணைந்த நிதியத்திற்கான பங்களிப்பு | Rs. '000 | 50,000 | 413,490 | 75,000 | 600,000 | 50,000 | 25,000 | 50,000 | 175,000 | 100,000 | 100,000 |
| வருட இறுதியில் ஊழியர் எண். | Nos. | 2,457 | 2,346 | 2,267 | 2,187 | 2,139 | 2,186 | 2,145 | 2,125 | 2,083 | 2,001 |
| வருட இறுதியில் மேலதிக நிதிய முதலீட்டு மீதி | Rs. '000 | 858,717 | 605,235 | 764,328 | 298,546 | 338,010 | 360,227 | 382,550 | 405,727 | 431,404 | 457,962 |

| பிரதான செயலாற்றுகை சுட்டிகள் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உரிமையாண்மைக்கான அறவீடு மற்றும் வரிக்கு முன்னர் தேறிய இலாபம் | % | 32.69 | 32.39 | 19.98 | 25.08 | 11.32 | 11.92 | 19.45 | 16.54 | 22.85 | 14.43 |
| மொ. சொத்துக்களுக்கான அறவீடு, வரிக்கு முன்னர் தேறிய இலாபம் | % | 20.93 | 21.18 | 15.40 | 18.18 | 7.94 | 7.55 | 13.12 | 12.25 | 15.30 | 10.31 |
| நடைமுறை விகிதம் | Times | 2.02 | 2.26 | 4.38 | 3.64 | 3.00 | 2.52 | 2.78 | 4.07 | 3.58 | 4.33 |
| ஊழியர் ஒருவருக்கான தொழில்வாய்ப்புச் செலவு | Rs. '000 | 365.75 | 384.45 | 420.60 | 486.99 | 522.22 | 573.89 | 675.87 | 842.15 | 755.05 | 776.41 |
| உரிமையாண்மை : சொத்து விகிதம் | Times | 0.64 | 0.65 | 0.77 | 0.72 | 0.70 | 0.63 | 0.67 | 0.74 | 0.67 | 0.71 |
| சொத்துக்களின் மீதான திரும்பல் | % | 9.26 | 5.32 | 7.68 | 3.73 | 3.78 | 3.64 | 6.31 | 0.66 | 3.84 | 3.72 |
| மொத்த வருவாய் வளர்ச்சி | % | 15.34 | 4.96 | (14.17) | 14.81 | (9.81) | 16.89 | 10.00 | 9.44 | 2.40 | (3.75) |

# இடர் முகாமைத்துவம்

இடரினை அளவிடுவதற்கு அல்லது மதிப்பீடு செய்வதற்கு மற்றும் இடரினை நிர்வகிப்பதற்கான உத்திகளை விருத்தி செய்வதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் இடர் முகாமைத்துவ செயன்முறையில் உரிய கவனத்தைச் செலுத்தியுள்ளது. உபாயம் சார் இடர், செயற்பாட்டு இடர், நிதிசார் இடர்˙ போன்ற மூன்று அம்சங்களின் கீழ் இடர் முகாமைத்துவச் செயன்முறை யாதாயினும் வர்த்தக நடவடிக்கைக்கும் தீங்கு விளைவிக்க முன்னர் குறைப்பதற்கு அல்லது முற்றிலும் அகற்ற தொடர்ந்து மீளாய்வு செய்யும்.

இடர் முகாமைத்துவத்தின் பிரதான குறிக்கோளானது சாத்தியமான பிரச்சினைகள் வலிமையாவதற்கு மற்றும் நடைபெறுவதற்கு முன்னர் அவற்றை இனங்காண்பதாகும். ஒரு நிறுவனத்தை எதிர்மறையாகப் பாதிக்கக்கூடிய உட்புற மற்றும் வெளிப்புற இடர்களை இடர் முகாமைத்துவம் கவனிக்கின்றது. இடர்நேர்வுக் காரணிகளை நிவர்த்தி செய்வதற்கு தொடர்ச்சியான தூரநோக்குச் செயன்முறைகள் இருத்தல் வேண்டும். இடர் முகாமைத்துவத் திட்டமொன்றைக் கொண்டிருப்பது கட்டுப்பாட்டை மீறிய ஒரு திடீர் நெருக்கடி அல்லது சூழ்நிலையை எதிர்கொள்வதை விட எளிதானதும் செலவு குறைந்ததும் ஆகும்.

## இடர் முகாமைத்துவச் செயன்முறை




## இடர்நேர்வு வகைகள்

- உபாயம்சார் இடர்நேர்வு
- செயற்பாட்டு இடர்நேர்வு
- நிதிசார் இடர்நேர்வு



**1. உபாயம்சார் இடர்நேர்வு**

உபாயம்சார் இடர்நேர்வு என்பது வியாபாரத் தீர்மானங்களின் தோல்வி அல்லது இடர் நிறுவனத்தின் ஒட்டுமொத்த உபாயத்தில் நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்தவதாகும். அதாவது, குறிப்பாக உயர் மட்டத்தில் உள்ள தலைவர்களும் குழுக்களும் உபாயம்சார் இடர்நேர்வு குறித்து கவனத்திற் கொள்ள முடியுமாக இருத்தல் வேண்டும். இவ்வகையான இடர்நேர்வு நிறுவனங்களுக்கு உண்மையான ஆபத்தை ஏற்படுத்துகின்றது. இந்த இடர்நேர்வினை பணிப்பாளர் சபை உயர் முகாமையுடன் நிர்வகிக்கும்.

**2. செயற்பாட்டு இடர்நேர்வு**

செயற்பாட்டு இடர்நேர்வானது நடைமுறைகள், முறைமைகள் அல்லது கொள்கைகள் ஆகியவற்றின் தோல்வி அல்லது போதாமை, ஊழியர் தவறுகள், நாளாந்த வர்த்தகச் செயன்முறைகளைச் சீர்க்குலைக்கும் யாதாயினும் நிகழ்வு ஆகியவற்றுடன் தொடர்புறுகின்றது.

**3. நிதிசார் இடர்நேர்வு**

நிதிசார் இடர்நேர்வு என்பது ஒரு கூட்டுத்தாபனம் அதன் கடன்களை திருப்பிச் செலுத்தும் கடப்பாட்டினை நிவர்த்தி செய்வதற்கு இயலாதிருப்பதாகும். இது ஒரு முதலீட்டில் அல்லது வியாபாரத்தில் பணத்தை இழக்கும் சாத்தியப்பாடாகும்.

| இடர் வகை மற்றும் வெளிப்பாடு | குறிக்கோள்கள் | பரிகார நடவடிக்கைகள் |
|---|---|---|
| **1. உபாயம்சார் இடர்நேர்வு** | | |
| **1.1 வர்த்தக இடர்நேர்வு** | கூட்டுத்தபனத்தின் வர்த்தகத்திற்கு குறைபாடாகவுள்ள அல்லது பொருத்தமற்ற அடிப்படை கூட்டுரு உபாயங்களை வெளிப்டுத்தும் மற்றும் அமுல்படுத்தும் இடர்நேர்வினைத் தவிர்த்தல். | வர்த்தகம் எவ்வாறு செயற்படுகின்றது மற்றும் பொருளாதார, தொழில்நுட்ப ரீதியான சுற்றாடலின் பொருத்தமான அம்சங்கள் குறித்து எல்லா தகவல்களையும் பணிப்பாளர் சபை தொடர்ச்சியாகப் பெற்றுக் கொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்தல் |
| | | வருமானம் மற்றும் செலவினத்திற்கான கட்டுப்பாட்டுக் கருவியாகச் செயற்படும் வரவுசெலவு திட்டங்கள் மற்றும் திட்டங்கள் தயாரித்தல் மற்றும் அனுமதி பெறல் |
| | | நிறுவனத்தில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வெளிப்புற தொடர்புடைய இடர்களை இனங்காண்பதற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளை விருத்தி செய்தல். |
| **1.2 வர்த்தகமற்ற இடர்நேர்வு** | வெளிப்புற சூழலிலிருந்து ஏற்படும் இடர்களைக் குறைப்பதுடன் வர்த்த வெற்றியினைப் பேணுதல். | கூட்டுருத் திட்டம் மற்றும் செயல்திட்டத்தினைத் தயாரிக்கும் போது, பொருளாதார மாற்றங்கள், அரச கொள்கை மாற்றங்கள், காலநிலை மாற்றங்கள் போன்ற வெளிப்புற சந்தர்ப்பங்கள் மற்றும் அச்சுறுத்தல்களை மதிப்பீடு செய்தல். |
| **2. செயற்பாட்டு இடர்நேர்வு** | | |
| **2.1 சொத்துக்கள் இடர்நேர்வு சேதம் மற்றும் மோசடி** | **விசேடமாக இயந்திரோபகரணங்கள் செயலிழத்தல், தீயினால் , ஊழியர்களினால், கள்வர்களால் ஏற்படக்கூடிய சேதங்கள் போன்ற சொத்துக்களினால் ஏற்படும் இழப்பீடுகளைக் குறைத்துக் கொள்ளல்.** | **நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு பலம்வாய்ந்த மற்றும் வினைத்திறன்மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்.** |
| | | **கட்டடங்கள், வாகனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் இயந்திரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும் விரிவான காப்புறுதியினைப் பெறுதல்.** |
| | | **திட்டமிடப்பட்ட தடுப்பு மற்றும் பராமரிப்பு நிகழ்ச்சிகளை மேற்கொளளுதல்.** |
| **2.2 போட்டி இடர்நேர்வு** | **தரங் குறைந்த இறக்குமதி செய்யப்பட்ட மர உற்பத்திகள் காரணத்தால் சந்தைப் பங்கு குறைவடைதலைத் தவிர்த்தல்.** | **காணப்படும் தரநியமங்களின் பிரகாரம் உள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்ளுதல்** |
| | **மரக் குற்றிகள், மரத்துண்டங்கள், சிலிப்பர் கட்டைகள், மின்கம்பங்கள், யானை வேலிக்கம்பங்கள் போன்ற ளுவுஊயின் பிரதான உற்பத்திகளின் விற்பனையினை அதிகரித்துக் கொள்ளுதல்.** | **பல்வேறு பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் மூலம் ளுவுஊ வியாபாரக் குறியினை வலுப்படுத்துதல்.** |
| | | **ஏற்கனவே உள்ள பொருட்களை விருத்தி செய்வதற்கு புதிய கருத்தாங்களைக் கொண்டுவருதல், புத்தாக்கமுள்ள பொருட்களை அறிமுகப்படுத்துவதற்கு சந்தை ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதிகமான வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்கும் உற்பத்திக் கிரயத்தினை குறைப்பதற்கும் தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துதல்** |

| | | |
|---|---|---|
| **2.3 சூழல்சார் இடர்நேர்வு** | செயற்பாடுகளினால் சூழலில் ஏற்படும் பாதகமான விளைவுகளைக் குறைத்தல். | உரிய நிறுவனங்களினால் நிர்ணயிக்கப்பட்ட நியமங்களுடன் இணங்குதல் மற்றும் இணங்குகின்றமையை உறுதிப்படுத்துதல். |
| | | அரிமர விரயத்தினைக் குறைத்தல் மற்றும் கழிவுகளை சூழலினுள் முறையாக அகற்றுதல் |
| | கூட்டுத்தாபனத்தின் சூழல் சார் கொள்கைகளுக்கு இணங்க செயற்படுதல். | தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள், அலுவலகங்கள், பல்வேறு நிகழ்ச்சிகள், குழுக்கள் ஆகியவற்றிற்கு இடையில் மரம் நடுதல் நடவடிக்கைகளை மேம்படுத்தவதற்கு மரம் நடுதல் தொடர்பிலான கன்றுகள் மற்றும் உபகரணங்களை விநியோகித்தல். |
| **2.4 ஊழியர் திருப்தி** | நல்ல ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஊடாக ஊழியர்களின் தொழில் திருப்தி மட்டத்தினை உச்சப்படுத்துதல் | ஊழியர் ஆரோக்கியத்தினையும் பாதுகாப்பு அம்சங்களையும் பேணுதல் மற்றும் அவதானித்தல் மற்றும் உற்பத்திப் பணிக்குழாத்தினருக்கு பாதுகாப்பு உபகரணங்களை வழங்குதல். |
| | | ஒவ்வொரு ஊழியருக்கும் மருத்தவக் காப்புறுதியினை வழங்குதல். |
| | | ஊழியர் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு சுகாதார பரிசோதனைக் கிளினிக்குகள், கருத்தரங்குகள் போன்ற செயற்பாடுகளை ர்சு பிரிவு மேற்கொள்கின்றது. |
| | ஊழியப் புரள்வினைக் குறைத்தல் | எல்லா மட்டங்களிலும் உள்ள ஊழியர்களுடன் ஆரோக்கியமான மற்றும் சுமுகமான உறவினைப் பேணுதல். |
| | குறுக்கீடுகள் இல்லாது செயற்பாடுகளின் சீரான ஓட்டத்தினை உறுதிப்படுத்துதல் | சப்பாத்துக் கொடுப்பனவு, குறைந்த வட்டி வீதங்களில் கடன்கள், வருகை ஊக்குவிப்புகள் போன்ற பல்வேறு விதத்தில் நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தல். |
| | மிகச் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுதல் மற்றும் பயிற்சி மூலம் பொருத்தப்பாட்டினை உறுதிப்படுத்தல் மற்றும் உயர் தரமான ஊழியர்களை ஈர்த்தல் மற்றும் தக்கவைத்தல். | தேவையான சந்தர்ப்பங்களில் எல்லா மட்டத்திலும் உள்ள ஊழியர்களை உள்ளடக்குமாறு விசேட மற்றும் பொதுப் பயிற்சி நெறிகளை வழங்குதல். |
| | | இது அரசிற்கு சொந்தமான வர்த்தக நிறுவனமொன்று என்பதால் குறிப்பிட்ட நடைமுறையுடன் இணங்குமாறு ஆட்சேர்ப்பு படிமுறைகளை மேற்கொள்ளுதல். |
| **2.5 வாடிக்கையாளர் திருப்தி** | வாடிக்கையாளரைத் திருப்திபடுத்துதல் மற்றும் வாடிக்கையாளர் தேவைகளை இனங்காணுதல். | புத்தாக்கமிகு உற்பத்திகளை அறிமுகப்படுத்ததல். |
| | | சந்தை ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் வாடிக்கையாளர் முறைபாடுகளை மதிப்பீடு செய்தல். |
| | | உயர் தகுதிவாய்ந்த, அனுபவமிக்க, ஆற்றல்மிகு ஊழியர்களை ஈர்த்தல் மற்றும் தக்கவைத்தல். |
| | | வுாடிக்கையாளர் திருப்தி மட்டத்தினை இனங்காண்பதற்கு தரக் கட்டுப்பாட்டுச் செயன்முறைகளை அமுல்படுத்துதல். |
| | புத்தாக்க மற்றும் உற்பத்தி அபிவிருத்தி | புதிய உற்பத்திகள்.'. முறைகள் அல்லது செயன்முறைகள் போன்றவற்றை அடையாளங் காண்பதற்கு ளுவுஊ சொந்தமான ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகொன்றினை நிறுவுதல். |
| **2.6 தொழில்நுட்பம் மற்றும் தரம் தொடர்பிலான இடர்நேர்வு** | விரயம் மற்றும் காலாவதியைத் தவிர்ப்பதற்கு தற்கால தொழில்நுட்ப மற்றும் தர நியமங்களுக்கு அமைய வேலை செய்தல். | தற்போதுள்ள இயந்திரங்களை தொழில்நுட்பரீதியில் மேம்பட்ட இயந்திரங்களுக்கு பதிலீடு செய்வதற்கு நீண்டகால திட்டத்தினை விருத்தி செய்தல். |
| | நியமங்களைப் பூர்த்தி செய்யாத இருப்புக்களின் உற்பத்தியைக் குறைத்தல். | உரிய அதிகார சபைகளில் இருந்து சான்றிதழ்களைப் பெற்று உள்ளூர் மற்றும் சர்வதேச நியமங்கள் அதிகமானவையுடன் உற்பத்திகள் இணங்குவதாக உறுதிசெய்தல். |
| | | உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வுகளை நடாத்துதல். |
| | | தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |
| | | மர உற்பத்திகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு நிறுவனத்தினுள் தேவையான ஆய்வுகூட வசதிகளை வழங்குதல். |



| | | |
|---|---|---|
| **2.7 சட்ட மற்றும் ஒழுங்குவிதி இடர்நேர்வு** | சட்டங்களுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்காமையினால் ஏற்பட சாத்தியமான இழப்புக்களைக் குறைத்தல். | நியதிச்சட்ட மற்றும் நெறிப்படுத்தல் அமைப்புகளின் தேவைகளுடன் இணங்குதல். |
| | சட்ட ரீதியான பிரச்சினைகள் மாற்றமடைவதால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைப்பதற்கு எதிர் நடவடிக்கைகள் எடுத்தல் அல்லது குறைத்தல். | பணிப்பாளர்கள், தொடரபுபட்ட அதிகாரிகள் ஆகியோரின் ஆலோசனைகளைப் பெறுதல். |
| | சட்டரீதியான சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு வெற்றிகரமாக முகங் கொடுப்பதற்கான சக்திமிக்க, விளைபயன்மிக்க, நெகிழ்வுத்தன்மை கொண்ட அமைப்புக்களை அபிவிருத்தி செய்தல். | சட்ட ரீதியான கொள்கைப் போக்குகளைக் கண்காணித்தல். |
| **3. நிதிசார் இடர்நேர்வு** | | |
| **3.1 திரவத்தன்மை இடர்நேர்வு** | சக்திமிக்க திரவத்தன்மை நிலையினைப் பேணுதல். | கடன் பொறுப்புக்களையும் தொழிற்படு மூலதனத் தேவைகளையும் நிவர்த்தி செய்வதற்கு போதிய நியதிங்கள் உள்ளன என்பதை உறுதிப்படுத்தவதற்கு கூட்டுத்தாபனம் பெருமுயற்சி செய்கின்றது. |
| | | அடிக்கடி பணப்பாய்ச்சல் எதிர்வுகூறல் மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய காசு மற்றும் காசுக்கு சமமான நிலையினைப் பேணுதல் |
| **3.2 வட்டி வீத இடர்நேர்வு** | வட்டி வீதம் மாற்றமடைவதால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ளுதல் | கூட்டுத்தாபனத்தின் முதலீடுகளுக்கு மிகச் சிறந்த சாத்தியமான வட்டி வீதத்தினைப் பெறுவதற்கு வங்கிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துதல். |
| | | உள்ளூர் வட்டி வீதங்களில் உள்ள பாதகமான தளம்பல்களைத் தவிர்ப்பதற்கு மற்றும் அதிக செலவினைத் தடுப்பதற்கு வழங்குநர் கடனை எடுத்தல் மற்றும் பேச்சு வார்த்தை நடத்துதல். |
| **3.3 கடன் இடர்நேர்வு** | கடன்பெற்றோரிடமிருந்து கடன்களை அறவிட்டுக் கொள்ள முடியாத இடரினைக் குறைத்துக் கொள்ளுதல் | ஐயப்பாடான கடன்களுக்கு போதியளவு மீளாய்வு செய்ய மற்றும் வழங்க கூட்டுத்தாபனம் விபரமான கொள்கைகளைப் பேணுகின்றது. |
| | | பெரும்பாலும் பணத்தின் அடிப்படையில் மாத்திரம் விற்பனைகளை மேற்கொளளப்படுவதுடன் கடன் அடிப்படையிலான விற்பனைகள் அரச கொள்கைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றன. |
| | | எல்லா கிடைப்பனவுகளும் செலுத்தவேண்டியவையும் உன்னிப்பாக மதிப்பீடு செய்யப்படுகின்றன. |
| | | வாடிக்கையாளரின் கடன் தகுதித்தன்மையினை உறுதிப்படுத்தவதற்கு மதிப்பீட்டு நடைமுறையொன்றினைப் பின்பற்றுதல் மற்றும் வாடிக்கையாளர் அடிப்படையிலான குறிக்கப்பட்ட கடன் கொள்கைகளை அமுல்படுத்துதல். |
| | | கடன் நிலையினை மற்றும் சேகரிப்பினை தொடர்ந்தும் கண்காணித்து பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுதல். |
| **3.4 நாணயமாற்று இடர்நேர்வு** | இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளுக்கு வெளிநாட்டு நாணயமாற்று வீதங்களில் ஏற்படும் தளம்பல்களுக்கு உட்படுவதைக் குறைத்தல். | தளம்பல்களை உன்னிப்பாகக் கண்காணித்தல் மற்றும் அதனடிப்படையில் இறக்குமதி ஏற்றுமதிகளை திட்டமிடுதல். |
| **3.5 இருப்பு முகாமை இடர்நேர்வு** | வழக்கற்ற இருப்புக்கள் மீதான இழப்புக்களைக் குறைத்தல். | மாதாந்தம் நடைபெறும் உற்பத்தித் திட்டமிடல் கூட்டங்களில் வரவுசெலவு திட்டம் மற்றும் விற்பனைகள் எதிர்வுகூறல்களை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த உற்பத்தியினைத் திட்டமிடல். |
| | வழக்கற்ற இருப்புக்கள் மீதான இழப்புக்களைக் குறைத்தல். | மெதுவாக விற்பனையாகும் உற்பத்திகளைக் குறைப்பதற்கு பல்வேறு சந்தைப்படுத்தல் முறைகளைக் கையாளுதல். உதா.: "பிரசாத அபிமானி", புதுவருட மற்றும் கிறிஸ்மஸ் விளம்பரங்கள் |

| | | |
|---|---|---|
| | இருப்புக்களை வைத்திருக்கும் ஆகுசெலவினைக் குறைத்துக் கொள்ளுதல். | தரத்தினைப் பரிசீலிக்க வெவ்வேறான கட்டங்களில் பல்வேறு தர நியமங்களைப் பின்பற்றுதல் மற்றும் இதனை பொருட்களை விநியோக்கும் வரை உறுதிப்படுத்துதல். |
| | | மெதுவாக விற்பனையாகும் இருப்புக்களை அவ்வப்போது மீளாய்வு செய்தல் மற்றும் போதுமான அளவு வழங்குதல். |
| | | பிங்கர் ஜொயின்ட்ஸ் தயாரிப்புக்களை உற்பத்தி செய்வதற்கு கொதிகலன்களுக்கு, விறகாக அகற்றப்படும் சிறுமரத்துண்டங்களைப் பயன்படுத்துதல். |
| **3.6 மூலதன முதலீடு** | முதலீடுகளில் இழப்பு இடர்நேர்வினைக் குறைத்தல். | சொத்துக்களிலான முதலீடுகள் மூலதனப் பாதீட்டின் பிரகாரம் முறையாகத் திட்டமிடப்பட்டு சரியான நேரத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. |
| | | செயலற்ற சொத்துக்களை அதிகபட்ச மட்டத்திற்கு குறைத்தல். |
| | | இது அரசிற்கு சொந்தமான ஒரு வர்த்தக நிறுவனம் என்பதால், முதலீட்டு மட்டத்தின் அடிப்படையில் கடுமையான மூலதனச் செலவின நடைமுறையினைப் பின்பற்றுதல். |





# நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு

இலங்கையில் நம்பிக்கைமிகு அரிமரம் மற்றும் மர உற்பத்திப் பொருட்களை வழங்குவோனான அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஒரு பொறுப்புமிக்க கூட்டுப் பிரஜையாகும். சமூகத்திற்கு வழங்குவதில் நாம் நம்பிக்கைக் கொண்டுள்ளோம். எமது ஊளுசு நிகழ்ச்சிகள் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் கடுமையான கட்டமைப்பின் கீழ் வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன. இக்குறிக்கோளினை மனதிற் கொண்டு, நாம் அதன் வியாபாரம் செயற்படும் சூழலுடன் நல்லுறவை வளர்ப்பதற்கும் பொறுப்புடன் நிர்வகிப்பதற்கும் அயராது பணிபுரிகின்றோம். எமது நீண்ட கால மற்றும் குறுகிய கால குறிக்கோள்களை அடைவதற்கு வழிகோலும் பல கூட்டுச் சமூகப் பொறுப்பு செயற்றிட்டங்களை ஆரம்பிப்பதற்கு நாம் ஆதரவு வழங்குகின்றோம்.




## நெறிமுறைப் பொறுப்பு

நெறிமுறைக் கூட்டு சமூகப் பொறுப்பு நிகழ்ச்சிகள் எல்லா பங்குதாரர்களுக்கும் ஊழிர்களிலிருந்து வாடிக்கையளர் வரை வர்த்தகத்தில் நியாயமான கவனிப்பு கிடைப்பதை உறுதிசெய்வது குறித்து கவனஞ் செலுத்துகின்றன.

- 50ஆவது ஆண்டு நிறைவு விழாவுடன் நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டன.
    - 2,150,000 ரூபா பெறுமதிமிக்க 43 புலமைப்பரிசில்கள் பல்கலைக்கழகங்களில் கற்கும் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டன.
- ளுவுஊ பணிக்குழு அங்கத்தவர்கள் மற்றும் பல்கலைக்கழன மாணவர்களால் எழுதப்பட்ட அரிமரம் மற்றும் மரக் கைத்தொழிற்றுறை தொடர்பிலான ஆய்வுக் கட்டுரைகள் வெளிடப்பட்டன. ஆய்வுக்கட்டுரைகளின் சுருக்க விபரம் (தலைப்பு) பின்வருமாறு.

| ஆய்வுக் கட்டுரைகளின் தலைப்பு | |
|---|---|
| **பணிக்குழு உறுப்பினர்கள்** | **பல்கலைக்கழக மாணவர்கள்** |
| பிங்கர் ஜொயின்ட் செய்யப்படும் மர இனங்களுக்கான தரவலிமையினை இனங்காணுதல் | இயற்பியல் மற்றும் உடற்கூறு அம்சங்களைப் பயன்படுத்தி மர இனங்களை அடையாளங் காணல். |
| இலங்கை சந்தையில் மர இனங்களின் நம்பகத்தன்மையினை மதிப்பீடு செய்தல் | இலங்கையில் 50இற்கும் குறைவாக அறியப்பட்ட அரிமரங்களின் ஒரே வகையான மர பண்புகளையும் அவற்றின் பயன்களையும் தீர்மானித்தல். |
| இலங்கை மர இனங்களின் வலிமை வகையீடு | தனியார் துறை மற்றும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தால் பைன்மரத் தோட்ட அறுவடைக் கிரயத்தினை மதிப்பீடு செய்தல். |
| இலங்கையில் பிங்கர் ஜொயின்ட் உற்பத்திக்கான மிகவும் பொருத்தமான பசை வகை குறித்து ஆய்வு | பலமிக்க கூறுகளைப் பயன்படுத்தி பிங்கர் ஜொயின்ட் உற்பத்திக்கான மர வகைப்படுத்தல் முறையின் அபிவிருத்தி |

## ஊழியர் பயிற்சி நிகழ்ச்சிகள்

| உள்ளூர் பயிற்சி | | வெளிநாட்டுப் பயிற்சி | |
|---|---|---|---|
| மரத் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் (TTIT) | 799,651.00 | மொத்த செலவு | 1,910,310.88 |
| ஏனைய நிறுவனங்கள் | 1,200,075.00 | | |
| மொத்த செலவு | 1,999,726.00 | | |
| | | | |
| **பயிற்சி நிகழ்ச்சி வகை** | **நிகழ்ச்சி எண்ணிக்கை** | பல்வேறு துறைகளில் உள்ள ஊழியர்களை ஊக்குவிப்பதற்கும் வினைத்திறன் மிக்கவர்களாக மற்றும் விளைபயன் மிக்கவர்களாகவும் ஆக்குவதற்கு வெளியநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு வசதிகளை வழங்குதல். | |
| வுவுஜவுஇனால் வழங்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் | 09 | | |
| ஏனைய நிறுவனங்கள் | 40 | | |
| மேற்படிப்பிற்கான வசதிகள் (பட்டபின் கற்கை நெறி, பட்டப்படிப்பு, திப்புளோமா போன்றன) | 14 | | |
| மொத்த நிகழச்சிகள் | 63 | | |
| | | | |
| | 1,107 | பயிற்சியில் கலந்துகொண்ட ஊழியர் எண். | 08 |

## பரோபகார /சமூகப் பொறுப்பு

பரோபகார சமூகப் பொறுப்புக்கள் இயலுமான வகையில் நெறிமுறையுடன் சாதாரணமாக இயங்குவதைத் தாண்டி சமூகத்தினை மேம்படுத்துவதில் அயராது ஈடுபடுகின்றன.

- ♦ "துருஜன மாணவர் வங்கி" நிகழ்ச்சிக்குப் பங்களித்தல்.
  - கேகாலை மாவட்டத்தில் உள்ள 10 பாடசாலைகளுக்கும் குருணாகலை மாவட்டத்தில் உள்ள 4 பாடசாலைகளுக்கும் அரிமரம் மற்றும் மரங்கள் தொடர்பிலான புத்தகத் தொகுதியொன்றும் 14 விவசாய உபகரணத் தொகுதிகளும் நன்கொடை அளிக்கப்பட்டன.
  - 10 பாடசாலைகளில் மரம் நடுதல் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- ♦ 09 கல்விசார் நிறுவனங்களின் 325 மாணவர்களுக்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தில் விரிவுரைகளும் தொழிற்சாலை.்.பொறித்தொகுதியைப் பார்வையிடச் செல்ல வசதிகளும் மேற்கொள்ளப்பட்டன.
- ♦ அரிமரம் மற்றும் மர உற்பத்திகளின் பேண்தகு பாவனை குறித்து 1200 பாடசாலை ஆசிரியர்களை விழிப்பூட்டுவதற்கு நடாத்தப்பட்ட 12 செயலமர்வுகளுக்குப் பங்களித்தல் மற்றும் அவர்களுக்கு இடையில் 4000இற்கும் மேற்பட்ட மரம் தொடர்பிலான துண்டுப்பிரசுரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.
- ♦ கும்பஹு பண்டாரநாயக்கா கல்லூரியின் கேட்போர கூடம் மற்றும் மேடையினை பழுதுபார்ப்பதன் மூலம் "ஓ-டியபெ" கண்காட்சிக்கு கூட்டுத்தாபனம் பங்களித்ததுடன், கண்காட்சியில் ஒரு காட்சிக்கூடத்தினையும் நடாத்தியது.



- ♦ "அடசியவசக்க பியசட்டகன்"இன் கல்விக் கட்டுரைகள் உள்ளடக்கிய சஞ்சிகை அச்சடப்பட்டு சமூகத்தில் இலவசமாக விநியோகிக்கப்பட்டது.
- ♦ கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளுக்குப் பங்களித்தல்.
  - 2018இல் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் வன மற்றும் சுற்றாடல் விஞ்ஞான திணைக்களத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட வன கருத்தரங்கிற்குப் பங்களித்தல்.
  - ருஹுுணு பல்கலைக்கழகத்தின் விவசாயப் பீடத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட ஜஉயுநு 2018 கருத்தரங்கிற்குப் பங்களித்தல்.

## சூழல்சார் பொறுப்பு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் 2018ஆம் ஆண்டில் பின்வரும் சூழல்சார் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- ♦ மகாவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் நடாத்தப்பட்ட "வனரோப்பா" நிகழ்ச்சிக்கு உற்சாகமிகு பங்களிப்பு
  - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் எமது நாற்று மேடைகளில் ஏறக்குறைய 130,000 கன்றுகளை உற்பத்தி செய்து அரசாங்க, பகுதி அரசாங்க, அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தனியார் அமைப்புக்களுக்கு "வனரோப்பா" நிகழ்ச்சியின் கீழ் இலவசமாக விநியோகித்தது.
  - முன்னார் மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட 2018 "வனரோப்பா" தேசிய நிகழ்ச்சிக்கான பங்களிப்பு.
  - 2018 "வனரோப்பா" பிரதான நிகழ்வு குருணாகலை மாவட்டத்தில் நாக்காவத்த தேசிய பாடசாலையில் ஒழுங்குசெய்யப்பட்டது.
- ♦ 2018 "உலக சுற்றாடல் தினம்" நிகழ்ச்சிக்கு பங்களிப்பு
  - குருணாகலை மாவட்ட, நாரம்மல பிரதேச செயலகத்தின் கிராமங்களுடன் ஒன்றிணைந்து மெல்லகந்த வன ஒதுக்கத்தில் 2018 உலக சுற்றாடல் தினத்தினை நினைவு கூர்வதற்காக பலாமர நடுதல் நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டது.
  - மாத்தறை சுஜாதா வித்தியாலயத்திற்கு அருகில் "அலவெல்ல" பாதை நெடுகிலும் மரம் நடுதல் நிகழ்ச்சி ஒழுங்குசெய்யப்பட்டதுடன், 100 கன்றுகள் நடப்பட்டு அக்கன்றுகளைப் பாதுகாக்கும் வேலியும் நிறுவப்பட்டது.
  - அம்பாறையில் ஹரித்த ஜன மன்றத்திற்கு 50 பாதுகாப்பு வேலிகள் வழங்கப்பட்டதுடன் வக திணைக்களத்திற்கு 20 பாதுகாப்பு வேலிகள் வழங்கப்பட்டன.
  - கேகாலையில் இலங்கை இராணுவ சிங்ஹ ரெஜிமன்ட் பயிற்சிப் பாடசாலை, யாழ்ப்பாணம், வட மாகாண ஆளுனர் செயலகம் போன்ற அரசாங்க முகவர்களுக்கு கன்றுகளை வழங்குதல்.

## பொருளாதார பொறுப்பு

பொருளாதார தீர்மானங்களாவன ஒரே நேரத்தில் சமூகத்தின் மீதும் வியாபாரத்தின் மீதும் ஏற்படுத்தக்கூடிய அவற்றின் ஒட்டுமொத்த விளைவுகளைக் கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்படும். ஏனவெ, பொருளாதார பொறுப்பு பேண்தகு நடைமுறைகளில் ஈடுபடும் போது வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்தலாம்.

- ♦ அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஸ்டம்பேஜ், தொழிற்படு வரிகள், வருமான வரி, விசேட அறவீடுகள் என தேசிய பொருளாதாரத்திற்கு 2,199 மில்லியன் ரூபா பங்களித்துள்ளது.
- ♦ அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் பலருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றது. நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு துணை புரிகின்ற வேவையில்லாப் பிரச்சினையினைக் குறைப்பதில் ளுவுஊ முக்கியமானதொரு வகிபங்கினைக் கொண்டுள்ளது.
- ♦ குறைந்த அபிவிருத்தியடைந்த மற்றும் பின்னடைவு கொண்ட பகுதிகளில் ளுவுஊ பிராந்திய அலுவலகங்களை நிறுவுவதன் மூலம் பிராந்திய அபிவிருத்தியினை மேம்படுத்துவதுடன் பிராந்திய முரண்பாடுகளை நீக்குகின்றது. இப்பிரதேசங்களில் வர்த்தகத்தினை நிறுவியுள்ளமை பொதுமக்களுக்கு பாரிய அளவிலான நன்மைகளை வழங்குகின்றது.
- ♦ அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் இலங்கையில் மர அங்கீகாரம் மற்றும் பசுமை கட்டடச் சான்றிதழ் செயற்பாட்டில் சட்டரீதியான அதிகாரத்தைக் கொண்டுள்ளது. 2018ஆம் ஆண்டினுள் 187 மர அறிக்கைகள் வழகப்பட்டுள்ளதுடன், 382 மாதிரிகள் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன.

| மரச் சான்றிதழ் | அறிக்கைகளின் எண். |
|---|---|
| அடையாளப்படுத்தல் அறிக்கை | 133 |
| வலிமை அறிக்கை | 08 |
| ஈரப்பதன் உள்ளடக்க அறிக்கை | 30 |
| அடர்த்தி அறிக்கை | 26 |
| CCB பரிகரிப்பு அறிக்கை | 07 |
| போரன் பரிகரிப்பு அறிக்கை | 12 |
| மொத்தம் | 187 |

நெறிமுறைசார் சூழல்சார் பொருளாதார பரோபகார








# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

2019 மே 31

IEN/C/STC/1/9/215

தலைவர்,

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

**2018இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12ஆவது பிரிவின் பிரகாரம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைப்படுத்தற் தேவைகள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் மற்றும் 2018இன் இல 19ஆவது அதிகாரச்சட்டம் என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது அறிக்கை பாராளுமன்றத்தில் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை எனும் பிரிவில் விளக்கியுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, கூட்டுத்தாபனத்தின் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியல் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் செலுத்தவேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் பெறுமதி சேர் வரி மீதி 59,871,133 ரூபாவாகவும் குறிப்பிட்ட வரி அறிக்கைகளின் பிரகாரம் 63,841,605 ரூபாவாகவும் உள்ளமையால் 3,970,482 ரூபா வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கல்தெமுல்ல கட்டிடத் தொகுதியில் அட்டிமடுவில் பொருத்தப்பட்ட இரும்பு இறாக்கைகளை மீண்டும் சரி செய்வதற்கு செலவிடப்பட்ட ரூபா 834,124 ரூபா தொகையான செலவினம் நட்டக்கூற்றில் சீராக்குவதற்குப் பதிலாக நடைமுறை வேலையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம 01இன் 32ஆவது பிரிவின் பிரகாரம் ஏனைய கடன்கொடுத்தோரின் கீழ் குறிப்பிட்டுள்ள, வாடிக்கையாளர் முற்பணங்கள், காஉடன் விற்பனை முற்பணங்கள், உடன் விற்பனை கட்டுப்பாடு ஆகிய 03 கணக்குகளில் ஒரு தொகை கடன் மீதி 161,776,032 ரூபா ஈடுசெய்யப்பட்டுள்ளது. அதன்படி, நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட்டுள்ள கடன்கொடுத்தோர் மீதியின் உண்மையான நிலைமை சுட்டிக்காட்டப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) இலங்கைக் கணக்கீட்டு நியமம 16இன் 61ஆவது பிரிவின் பிரகாரம், ஒரு சொத்திற்கு பிரயோகிக்கப்பட்ட பெறுமானத்தேய்வு முறை குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியிலும் மீளாய்வுச் செய்யப்படுதல் வேண்டியதுடன், சொத்தில் உள்ளடங்கியுள்ள எதிர்கால பொருளாதார நலன்களின் எதிர்பாரக்கப்பட்ட நுகர்வு மாதிரியில் குறிப்பிடத்தக்க மாற்றமொன்று ஏற்பட்டிருந்தால், மாற்றமடைந்த மாதிரியினை பிரதிபலிப்பதற்கு இந்த முறை மாற்றப்படுதல் வேண்டும். அவ்வாறான மாற்றம் இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீடொன்றில் ஒரு மாற்றமாகக் கணக்கிடப்படவில்லை.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 79ஆவது பிரிவின் பிரகாரம், நிதிக் கூற்றுக்களின் பாவனையாளரின் தேவைகளுக்குரிய பின்வரும் தகவல்கள் வெளியிடப்படவில்லை.

(i) தற்காலிகமான செயலற்ற சொத்து, பொறித்தொகுதி, உபகரணம் ஆகியவற்றின் காவுகைத் தொகை

(ii) ளுடுகுசுளு 5இன் பிரகாரம் சொத்து, பொறித்தொகுதி, உபகரணம் ஆகியவற்றின் காவுகைத் தொகை செயற்படு பயன்பாட்டிலிருந்து விலகியதுடன் விற்பனைக்கு விடப்பட்டவையாக வகைப்படுத்தப்படவில்லை.

(iii) சொத்து, பொறித்தொகுதி, உபகரணம் ஆகியவற்றின் நியாயமான பெறுமதியுடன் கிரய முறை பயன்படுத்தப்பட்ட போது, காவுகைத் தொகையிலிருந்தும் இது பொருண்மையான ரீதியில் வேறுபட்டது.

(ஊ) நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலையாகக் குறிப்பிடப்பட்ட 2,035,694 ரூபா தொகை கொண்ட கெப்பெட்டிபொல இரட்டை விடுதிகளின் கோவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (ளுடுயுரளுள) அமைய என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் தலைப்பின் கீழ் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினரின் பொறுப்பு

உண்மையானதும் நியாயமானதுமான நோக்கினைத் தரும் இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிப்பதற்காக மற்றும் நியாயமாக முன்வைப்பதற்காக மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிகழுவதற்கு இடம்பாடுள்ள எண்ணிக்கை ரீதியாக பிழையான கூற்றுக்கள் இன்றி நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் பொருட்டு தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கின்ற போது கூட்டுத்தாபத்தினால் தொடர்ச்சியாக பேண முடியுமான ஆற்றலை தீர்மானிக்கும் பொறுப்பு முகாமைத்துவத்துக்கு உரியதாகும். முகாமைத்துவம் கூட்டுத்தாபனத்தைக் கலைப்பதற்கு உத்தேசிக்குமாயின் அல்லது வேறு மாற்றீடு இல்லாத விடத்து செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் அன்றி தொடர்ந்தேர்ச்சியான இருப்புக்கு ஏற்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறைப் பற்றிய பொறுப்பு, நிர்வகிக்கும் தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உட்பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு ஏற்ற வகையில் தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் எல்லாவற்றிற்கும் உரிய புத்தகங்கள் மற்றும் பதிவுகள் பேணப்படுதல் வேண்டும்.





### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மொத்தமாக நிதிக் கூற்றுக்களின் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் எண்ணிக்கை ரீதியான பொய்யான கூற்றுக்கள் அல்ல என்ற சாதாரண உறுதிப்பாட்டை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். சாதாரண உறுதிப்பாடு உயர் மட்டத்திலான சான்றிதழ் என்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும் போது அது எப்போதும் எண்ணிக்கை ரீதியான பிறழ் கூற்றுக்களை இனங்காணக்கூடிய உறுதிப்பாடாக அமையாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியான அல்லது கூட்டாக தாக்கம் செலுத்தும் எண்ணிக்கை ரீதியான பிறழ்கூற்றுக்கள் நிகழ முடியுமாயினும் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயனர்களினால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தாக்கத்தை செலுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில் ரீதியான முடிவு மற்றும் தொழில் ரீதியான சந்தேகத்துடன் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் நிகழ முடியுமான எண்ணிக்கை ரீதியான பிழையான கூற்றுக்களின் ஆபத்தை இனம்காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக நிகழக்கூடிய ஆபத்தைத் தவிர்ப்பதற்கு போதியளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். எண்ணிக்கை ரீதியான பொய்யான கூற்றுக்களினால் ஏற்படக்கூடிய தாக்கங்களை விட மோசடியினால் நிகழும் தாக்கம் பாரியது. கூட்டுச்சதி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தட்டிக்கழித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை கைவிடுதல் என்பன மோசடி நிகழுவதற்கு காரணமாகும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வு பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் உள்ளக நிர்வாகத்தின் பயனுறுதி தொடர்பில் அபிப்பிராயம் தெரிவிக்க இங்கு முன்வரவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் தகைமையை மதிப்பிடல்.

- நிகழ்வுகள் அல்லது நிலமைகள் காரணமாக கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான இருப்பு பற்றிய எண்ணிக்கை ரீதியான எதிர்பாராத விளைவுகள் உள்ளனவா என்பது தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டுக்கான நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு பற்றிய அடிப்படையைப் பயன்படுத்துவதன் ஏற்புடமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவு எதிர்பாரா நிகழ்வு உள்ளதாக நான் முடிவு செய்யுமிடத்து நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பிலான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தை செலுத்த வேண்டுமென்பதோடு, அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாத விடத்து எனது அபிப்பிராயத்தை திருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறெனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான இருப்பு முடிவடைய காரணமாகலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக் கூற்றுக்களில் வெளியிடல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டதோடு, அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதென மதிப்பீடு செய்தல்.

  எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக நிர்வாக பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வகிக்கும் தரப்பினர்களுடன் நான் தொடர்புகொள்கின்றேன்.

**2. வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தற் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை**

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து, 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஆ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெறப்பட்டுள்ளதோடு, எனது விசாரணை மூலம் தெரியவரும் விடயம் யாதெனில், சபை உரிய முறையில் நிதி அறிக்கைகளை பேணிவந்துள்ளது என்பதாகும்.



ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவின் தேவைப்பாடுகின்ன பிரகாரம் முன்வைக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் முந்தைய ஆண்டுடன் ஒத்தப்போகின்றன.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட சிபாரிசுகள் அனைத்தும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

  பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சியங்களின் மீது மற்றும் பொருண்மை ரீதியான விடயங்களுக்கு வரையறுத்து பின்வரும் பிரகடனங்களை செய்யுமளவுக்கு எந்தவொரு விடயமும் எனது அவதானிப்புக்கு உட்படவில்லை.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வர்த்தகத்தின் சாதாரண காரணத்திற்கு அப்பாற்பட்டவையாகிய நிறுவனத்தினால் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் ஏதேனும் நேரடி அல்லது மறைமுக ஈடுபாடு நிறுவனத்தின் ஆளும் குழுவின் யாராவது ஒருவருக்கு இருப்பின் அதனைக் குறிப்பிடுதல்.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த, ஏதேனும் ஏற்புடைய எழுதப்பட்ட சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளும் குழுவினால் வழங்கப்படும் வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைவாக அன்றி செயற்பட்டுள்ளாரெனக் குறிப்பிடுதல்.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
| --- | --- |
| **(அ) நிதிப்பிரமாணம் 571 (2)** | பிடிமானத் தொகையான 2,513,001 ரூபா, விலைமனு வைப்பான ரூபா 7,783,104, 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையில் காலாவதியாகிய பணி ஆரம்பித்ததன் பின்னரான முற்பணம் ரூபா 133,800 தொகை மற்றும் 02 வருடத்திற்கும் மேல் காலாவதியாகிய கெங் நெயில் வைப்பு ரூபா 1இ258இ635 தொகை என்பவற்றைத் தீர்த்து வைப்பதற்கோ அல்லது நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| **(ஆ) 1078இன் நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்ட இல 41** | அனுராதபுர பிரதேச அலுவலகக் கட்டுமானப் பணிகள் 2017 நவம்பர் 15 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட போதிலும், 2018 திசெம்பர் 03ஆந் திகதி ஆகியும் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அதற்கு உரிய திட்டங்களுக்கான அனுமதியினைப் பெற்றிருக்கவில்லை. |

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய, பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த, கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்கும் வண்ணம் செயற்படவில்லை எனக் குறிப்பிடுதல்இ

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய ஏற்புடைய சட்ட விதிகள் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வளங்கள் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் ஏற்புடைய காலப் பிரிவில் கொள்வனவுசெய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லையெனக் குறிப்பிடுதல்.

## 3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) 2013 முதல் 2017 வரையிலான காலப்பகுதியினுள் வேலைத் தளத்திற்காக ஒதுக்கப்பட்ட 10,833,500 ரூபா தெகையான முற்பணங்கள் மற்றும் 2013ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்ட 1,142,000 ரூபா தொகை ஆகியன 2019 ஏப்பிரல் ஆகியும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1983ஆம் ஆண்டு முதுல் ஒரு தனியார் கம்பனியிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 11,873,954 தொகை, அரச மற்றும் பகுதி அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 207,910,689 தொகை, ஒரு தனியார் தாபனத்திடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,687,042 தொகை, 4 வருடங்களுக்கும் மேல் முடிவடைந்த இரு நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 777,353 தொகை ஆகியவற்றை அறவிடுவதற்கு 2018 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மற்றும் வன பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றிடமிருந்து மீட்கப்படவேண்டிய மின்சாரம், நீர் செலவினங்கள், கட்டட வாடகை ஆகியவற்றிற்கான முறையே ரூபா 1,661,487, ரூபா 31,333,241 தொகைகளை அறவிடுவதற்கு 2018 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.



NAOSL | ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

(ஈ) அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் அனுராதபுர பிரதேச அலுவலகக் கட்டடத்தின் மற்றும் விடுதிகளின் கட்டுமானப் பணி ஒப்பந்தத்தின் படி 2018 மார்ச் 21ஆந் திகதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருப்பினும் அவ்வாறு அது நடைபெற்றிருக்கவில்லை. 2018 ஆகஸ்ட் 25ஆந் திகதி வரை அதற்கான காலப்பகுதி நீடிக்கப்பட்ட போதிலும், 2018 திம்பெர் 03ஆந் திகதி ஆன போதிலும் கட்டுமானப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. அதன்படி, 2018 ஆகஸ்ட் 15ஆந் திகதியின் பின்னர் ஒரு நாளைக்கு 15,000 ரூபாவாக தாமதக்கட்டணம் ரூபா 1,500,000 அறவிடப்பட வேண்டி இருப்பினும், அக்கட்டணங்களை மீட்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. அலுவலக வாடகையாக ரூபா 375,000 தொகை உரிய திகதியில் பூர்த்தி செய்யப்படாமையாக செலுத்தப்பட வேண்டியிருந்தது. ஒப்பந்ததாரர் செயலாற்றுகைப் பிணை மற்றும் காப்புறுதிப் பாதுகாப்பு காலப்பகுதியினை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 2017 செப்தெம்பர் 13ஆந் திகதி கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பதியதலாவ களஞ்சியசாலை பொறுப்பாளர் அலுவலகக் கட்டுமானப் பணிகள் 2018 திசெம்பர் 31ஆந் திகதியான போதும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

**டப்ளியூ.பீ.சீ. விக்கிரமரத்ன**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி



# வருடாந்த கணக்குகள்

**இலாபம் அல்லது நட்டம் மீதான கூற்று**

| திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கானது | குறிப்பு | 2018 ரூபா | 2017 ரூபா |
|---|---|---|---|
| விற்பனைப் புரள்வு | 2 | 4,069,020,266 | 4,253,774,266 |
| கழிக்க - விற்பனை ஆகுசெலவு | 3 | (2,104,372,869) | (2,177,824,205) |
| **செயற்பாடு மீதான மொத்த இலாபம்** | | **1,964,647,397** | **2,075,950,061** |
| ஏனைய வருமானங்கள் | 6 | | |
| தொழிற்படு | 6.2 | 73,199,174 | 103,163,513 |
| தொழிற்பாடற்ற | 6.1 | 314,804,979 | 273,779,849 |
| **மொத்த தேறிய வருமானம்** | | **2,352,651,550** | **2,452,893,423** |
| விற்பனை மற்றும் விநியோகித்தல் செலவினங்கள் | 4 | (789,340,223) | (680,617,770) |
| நிர்வாகச் செலவினங்கள் | 5 | (890,878,473) | (805,471,293) |
| **வரி வசூலுக்கு முன் இலாபம்** | | **672,432,854** | **966,804,360** |
| திறைசேரிக்கு செலுத்திய வரிகள் | | (100,000,000) | (100,000,000) |
| **வரி வசூலுக்கு பின் இலாபம்** | | **572,432,854** | **866,804,360** |
| வருடத்திற்கான வரிவிதிப்பு | 7 | (250,372,289) | (301,062,806) |
| **வருடத்திற்கான இலாபம்** | | **322,060,565** | **565,741,554** |

**விபரமான வருமானக் கூற்று**

| திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் **வருடத்திற்கானது** | குறிப்பு | 2018 ரூபா | 2017 ரூபா |
|---|---|---|---|
| **வருடத்திற்கான இலாபம்** | | **322,060,565** | **565,741,554** |
| ஏனைய விபரமான வருமானங்கள் | | | |
| வருடத்திற்கான ஓய்வூதிய நலன் மிகை/குறை | 17 | 107,601,910 | (323,413,595) |
| **வருடத்திற்கான ஏனைய விபரமான வருமானங்கள்** | | **107,601,910** | **(323,413,595)** |
| **வருடத்திற்கான மொத்த விபரமான வருமானங்கள்** | | **429,662,475** | **242,327,959** |

**நிதி நிலைமைக் கூற்று**

| திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு | | 2018 ரூபா | 2017 ரூபா |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதி, இயந்திரங்கள் | 8 | 983,985,526 | 980,517,535 |
| அருவச் சொத்துக்கள் | 9 | 1,384,486 | 1,443,873 |
| உயிரியல்சார் சொத்துக்கள் | 10 | 7,061,289 | 6,577,016 |
| திறைசேரி வைப்புக்கள் | | 2,966,000 | 2,966,000 |
| பிணை வைப்புக்கள்- ஊழியர் | | 67,948,050 | 63,941,048 |
| முதலீடுகள் | 11.1 | 646,408,384 | 605,190,777 |
| முன்செலுத்தப்பட்ட ஊழியர் நன்மைகள் | | 106,106,944 | 67,459,232 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 7.2 | 77,240,757 | 96,644,503 |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலைகள் | | 85,753,849 | 69,856,596 |
| **மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள்** | | **1,978,855,286** | **1,894,596,581** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 12 | 1,628,071,793 | 1,513,147,565 |
| வியாபார மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவை | 13 | 1,127,960,087 | 868,402,923 |
| நிலையான வைப்புக்களில் முதலீடு | 11.2 | 1,572,356,375 | 1,694,380,646 |
| காசும் காசுக்கு சமமானவையும் | 14 | 213,221,840 | 347,174,014 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **4,541,610,096** | **4,423,105,148** |
| **மொத்த சொத்துக்கள்** | | **6,520,465,382** | **6,317,701,729** |
| | | - | |
| உரிமைப்பங்கும் பொறுப்புக்களும் | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்குகள்** | | | |
| அதிகாரமளிக்கப்பட்ட | | 75,000,000 | 75,000,000 |
| | | | |
| பங்களித்த மூலதனம் | 15 | 41,503,668 | 41,503,668 |
| வருவாய் ஒதுக்கீடுகள் | | 4,277,346,100 | 3,857,127,941 |
| | | **4,318,849,768** | **3,898,631,609** |
| ஊழியர் கடன் சுழல் நிதியம் | 16 | 341,506,845 | 332,062,529 |
| **மொத்த உரிமைப்பங்கு** | | **4,660,356,613** | **4,230,694,138** |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வூதிய நலன் கடப்பாடு | 17 | 744,492,569 | 788,350,624 |
| பிணை வைப்புக்கள் - ஊழியர் | | 67,948,050 | 63,941,048 |
| **மொத்த நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | **812,440,619** | **852,291,672** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வருமான வரிப் பொறுப்புக்கள் | 18 | 361,558,026 | 268,225,025 |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவை | 19 | 686,110,124 | 966,490,894 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **1,047,668,150** | **1,234,715,919** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **1,860,108,769** | **2,087,007,591** |
| **மொத்த உரிமைப்பங்கும் பொறுப்புக்களும்** | | **6,520,465,382** | **6,317,701,729** |

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பான இக்கூற்று 1971 இல 38ஐக் கொண்ட நிதிச் சட்டத்தின் பிரமாணங்களின் பிரகாரம் முன்வைக்கப்படடுள்ளது.

**பொது முகாமையாளர்**
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

பக்க இல 6 முதல் 12 வரையிலான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பக்க இல 13 முதல் 21 வரையிலான குறிப்புக்கள் என்பன நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் மற்றும் முன்வைக்கும் பொறுப்பு பணிப்பாளர் சபைக்குரியது. இந்நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் சார்பாக கையொப்பமிடப்பட்டுள்ளது.

**தலைவர்**
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
பணிப்பாளர் சபை சார்பாக்

**பணிப்பாளர்**

திகதி : 2019.03.07



## உரிமையாண்மை மாற்றங்கள் தொடர்பிலான கூற்று

| | பங்களித்த மூலதனம் ரூபா | ஊழியர் கடன் சுழலும் நிதியம் ரூபா | வருமானப் ஒதுக்கல்கள் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|
| **2017 ஜனவரி 01ஆந் திகதியில் மீதி** | **41,503,668** | **243,052,926** | **3,703,809,585** | **3,988,366,179** |
| வருடத்திற்கான சீராக்கல்கள் | - | 81,000,000 | (81,000,000) | - |
| வருடத்திற்கான இலாபம் | - | - | 565,741,554 | 565,741,554 |
| வருடத்திற்கான ஊழியர் கடன் வட்டி | - | 8,009,603 | (8,009,603) | - |
| ஏனைய விரிவான வருமானங்கள் | - | - | (323,413,595) | (323,413,595) |
| **2018 ஜனவரி 01ஆந் திகதியில் மீதி** | **41,503,668** | **332,062,529** | **3,857,127,941** | **4,230,694,138** |
| வருடத்திற்கான இலாபம் | - | - | 322,060,565 | 322,060,565 |
| ஊழியர் கடன் வட்டி செம்மையாக்கல் | - | 9,444,316 | (9,444,316) | - |
